வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 02.12.2021 வியாழக்கிழமை | இதழ் : 362 | பக்கங்கள் : 16






## தொடர்கின்றது சீரற்ற காலநிலை யாழில் 121 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 02

சீரற்ற காலநிலை காரணமாக யாழ். மாவட்டத்தில் தற்போது 121 குடும்பங்களைச் சேர்ந்த 380 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என யாழ்.மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரிய ராஜா தெரிவித்தார்.

அத்தோடு சீரற்ற காலநிலையால் 7 வீடுகள் 15

# தமிழர்கள் நலன்சார் நிலைப்பாட்டை தையில் அமெரிக்கா வெளிப்படுத்தும்

## சுமந்திரன் எம். பி. நம்பிக்கை



லண்டன், டிசெம்பர் 02

பொறுப்புக்கூறல் தொடர்பான ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் தீவிர செயல்பாடுகளில் ஈடுபடும் வித்தியாசமான நாட்டத்தைக் கொண்டிருப்பதுடன், இலங்கையில் அனைத்து சமூகங்களினதும் அபிலாசைகளுடனான அரசியல் தீர்வொன்றைக் காண்பதிலும் அமெரிக்கா அக்கறை கொண்டிருக்கிறது.

அமெரிக்க அரசு அதிகாரிகள் பலருடனும் பேச்சுக்களை நடத்தி திரும்புகையிலேயே லண்டனில் 15

# சித்திரவதைக்கு எதிரான ஐ. நா. குழுவிடம் அறிக்கை சமர்ப்பிக்க தவறியது இலங்கை!

ஜெனிவா, டிசெம்பர் 02

ஐ. நா. சித்திரவதைகளுக்கு எதிரான நிபுணர் குழுவுக்கு ஒதுக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் தனது அறிக்கையை சமர்ப்பிக்கத் தவறிய 15 நாடுகளில் இலங்கையும் இருக்கிறது என்று யஸ்மின் சூகாவின் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்ட அமைப்பு தெரிவித்துள்ளது. 15




## டெங்கு நோய் அதிகம் பரவும் அபாயத்தில் யாழ். மாவட்டம்!

### கட்டுப்படுத்த நடவடிக்கை - அரச அதிபர்

யாழ்ப்பாணம், நவ. 02

யாழ்ப்பாண மாவட்டத்தில் மழையுடனான காலநிலையின் பின்னர் டெங்கு பரவும் அபாயம் அதிகரித்துக் காணப்படுகின்றது. கடந்த வருடத்தைவிட இந்த வருடத்தில் கடந்த வாரம் வரை டெங்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் வரை 133 டெங்கு நோயா 15

## அராலியில் இரு வீடுகளில் எரிவாயு அடுப்பு வெடிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ 02

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி கிழக்கு ஜே/163 கிராம சேவகர் பிரிவில் உள்ள இரண்டு வீடுகளில் அண்மையில் எரிவாயு அடுப்புகள் வெடித்துச் சிதறியுள்ளன.

கடந்த 28ஆம் திகதி ஒரு வீட்டிலும் 29ஆம் திகதி மற்றைய வீட்டிலும் இந்த வெடிப்பு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

இது தொடர் 15

## எரிவாயு சிலிண்டர் வெடிப்புக்கள் முடிவுகளின்றி முடிந்தது கூட்டம்

கொழும்பு. டிசெ. 02

எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று இடம்பெற்ற விசேட ஆலோசனை குழுவின் கூட்டத்தில் முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளது.

வெடிப்பு சம் 15

## வடக்கில் மீண்டும் தொற்று உச்சம்!

யாழ்ப்பாணம், டிசெ. 02

வடக்கு மாகாணத்தில் மீண்டும் கொரோனாத் தொற்று நிலை அதிகரித்துள்ளதாகவும் 15

## தொற்றால் 26 பேர் பலி!

கொழும்பு, டிசெ. 02

கொரோனா தொற்றால் நேற்று முன்தினம் 26 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் 15

## வெடிப்பு சம்பவங்கள் குறித்து விசாரணை இடம்பெறுகின்றது

### அரச அதிபர் மகேசன்

யாழ்ப்பாணம், டிசெ. 02

"யாழ்ப்பாணத்தில் எரிவாயு அடுப்புகள் வெடித்த மூன்று சம்பவங்கள் தொடர்பில் ஆராய்ந்து பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை ஊடாக அறிக்கை சமர்ப்பிக்கக் கோரியுள்ளேன்", 15

## முழங்காவிலிலும் காஸ் சிலிண்டர் தீ பற்றியது!

கிளிநொச்சி, டிசெ.02

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் சமையல் எரிவாயு சிலிண்டர் கசிவு ஏற்பட்டு தீப்பற்றியது.

நேற்று பிற் 15

### புலிகளின் தங்கம் தேடிய விவகாரம்

## பொதுப் பாதுகாப்பு அமைச்சர் வீரசேகரவின் ஒருங்கிணைப்பு செயலர் உடன் பணிநீக்கம்!

கொழும்பு, டிசெ. 02

இறுதி போர்க் காலத்தில் புதைக்கப்பட்டதாக கருதப்படும் புலிகளின் தங்கத்தை தேடிய சம்பவம் தொடர்பில் பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவின் ஒருங்கிணைப்பு செயலர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர் உடன் அமுலுக்கு வரும் வகையில் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என பொது பாதுகாப்பு அமைச்சு 15



## டெங்கு நோய்...

ளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள னர் என்று அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாண மாவட்ட செயல கத்தில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப் பின்போதே மேற்கண்டவாறு அவர் தெரி வித்தார்.

இந்த நிலையில், எதிர்வரும் 6ஆம் திகதி தொடக்கம் டெங்கு நுளம்பு கட் டுப்பாட்டு வாரம் பிரகடனப்படுத்தப் பட்டு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் அவர் கூறினார்.

மேலும். டெங்கு நோய் பரவல் அதிக மாக செப்ரெம்பர் ஒக்ரோபர் நவம்பர், டிசெம்பர் மாதங்களில் அதிகரித்து காணப்படுகின்றது. இதன் அடிப்படை யிலேயே சுகாதார விழிப்புணர்வு குழுக் கூட்டத்தில் கொரோனா, டெங்கு தொடர் பில் ஆராய்ந்து இருந்தோம்.

இதற்கிணங்க டெங்கு நோயைக் கட் டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து இருக்கின்றோம். அதன் பிரகாரம் எதிர்வரும் 6ஆம் திகதி தொடக் கம் ஒரு வாரத்தை நுளம்பு கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப்படுத்தி அந்த வாரம் யாழ்ப்பாண குடாநாடு முழுவதும் அனைத்து பங்குதாரர்களுடனும் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கையை மேற் கொள்ளவுள்ளோம்.

இதனடிப்படையில் ஒவ்வொரு பிர தேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதி யிலும் டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு செயலணி கூட்டத்தை நடத்தி இதனடிப் படையில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவு ரீதியாகவும் தங்களுடைய பிரதே சத்தில் டெங்கு கட்டுப்பாட்டை மேற் கொள்ள கூடிய நடவடிக்கையை முன் னெடுக்க வேண்டும் என்று கூறியுள் ளோம்.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவி லும் உள்ள உள்ளூராட்சி மன்றத்தினர் மற்றும் சுகாதார மருத்துவ அதிகாரி பணி மனையினர் மற்றும் ஏனைய அதிகாரி களுடன் இணைந்து டெங்கு ஒழிப்பு வாரத்தை செயல்படுத்துவதற்கு தீர்மா னிக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ-3)

## வடக்கில் மீண்டும்...

நவம்பர் மாதத்தில் மட்டும் 3 ஆயிரத்து 49 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட் டது. அத்துடன், 49 பேர் பலியாகினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் ஒக்ரோபரை விட நவம்பர் மாதத்தில் கோவிட்-19 நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண் ணிக்கை அதிகரித்துள்ளது என்று மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாணத்தில் ஒக்ரோபர் மாதத் தில் 2 ஆயிரத்து 661 பேர் கோவிட்-19 நோய்த் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். எனினும், நவம்பர் மாதத்தில் 3 ஆயிரத்து 49 பேர் தொற்றா ளர்களாக அடையாளம் காணப்பட்டுள் ளனர்.

ஒக்ரோபர் மாதத்தில் கோவிட்-19 நோயி னால் 71 பேர் உயிரிழந்தனர். நவம்பர் மாதத் தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 49 பேரா கக் குறைவடைந்துள்ளது.

## தமிழர்கள்...

வைத்து எம். ஏ. சுமந்திரன் எம். பி. இவ் வாறு தெரிவித்தார்.

லண்டனில் அவரைச் சந்தித்த வெளி நாடு வாழ் இலங்கைத் தமிழர் அமைப் பின் பிரதிநிதிகளிடமே அவர் மேற்கண் டவாறு தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்காவிலிருந்து கனடாவுக்கும் விஜயம் செய்திருந்த சுமந்திரன், இரு நாடு களிலும் அரசு தரப்பினருடன் தாம் மேற் கொண்ட சந்திப்புகள் பயனுடையதாக இருந்ததாகத் தெரிவித்தார். சுமந்திரனு டன் இந்த நாடுகளில் பயணம் மேற் கொண்டிருந்த இரா. சாணக்கியன் எம். பி. யும் சந்திப்பில் உடனிருந்தார்.

ஜனவரி மாத நடுப்பகுதியில், இலங் கையில் தமிழர் நலன் சார்ந்த தனது நிலைப் பாட்டை அமெரிக்கா வெளிப்படுத்தும் என்றும் சுமந்திரன் நம்பிக்கை தெரிவித் தார்.

மாகாண சபைத் தேர்தல்கள் தொடர் பில் கருத்துத் தெரிவித்த சுமந்திரன், இத் தேர்தலை நடத்த வேண்டியது அவசர மானதென்றும், அதனை வலியுறுத்தும் விதத்தில் அதற்கான தனது சட்டத் திருத் தத்தை பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.

அமெரிக்க பேச்சுகள் தொடர்பில் அமெரிக்காவில் இந்திய தரப்பினரையும் தாம் சந்தித்து விவரங்களைத் தெரிவித்த தாகவும், இலங்கை திரும்பியதும் தலைவர் இரா. சம்பந்தன் கூட்டமைப்பின் ஏனைய கட்சியினரையும் அழைத்து, இவ் விவரங் களைக் கலந்தாலோசிப்பார் என்றும் சுமந் திரன் மேலும் தெரிவித்தார்.

## வெடிப்பு...

என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

மாவட்ட செயலகத்தில் அவர் நடத் திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரவித்தார்.

மேலும், விசாரணையின்போது பாவ னையாளர் பாதுகாப்பு அதிகார சபை யின் தலைமைப்பீடம் இந்த விடயங்களை - அதாவது எரிவாயு அடுப்பு வெடித்தல் சம்பவங்களை அந்தப் பிரதேச பொலிஸ் நிலையங்களின் ஊடாக விசாரணை செய்து அதனை சமர்ப்பிக்குமாறு அறி வித்துள்ளார்கள்.

எனவே, எமது பாவனையாளர் அதி கார சபையினர் யாழ்ப்பாண மாவட்டத் தில் எரிவாயு அடுப்பு வெடித்தல் இடம் பெற்ற பிரதேசங்களில் உள்ள பொலிஸ் நிலையங்கள் ஊடாக விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு அந்த அறிக்கையின் ஊடாக அடுத்த கட்ட நடவடிக்கை எடுக் கப்படும்.

குறிப்பாக, இந்த விடயமானது தேசிய மட்டத்தில் இடம்பெற்றுவரும் ஒரு சம் பவமாகும். எனவே, பாவனையாளர்கள் சிலிண்டர்களை கையாளும்போது எச் சரிக்கையாகக் கையாள வேண்டும். புதி தாக எரிவாயு சிலிண்டர்களை பெற்றவர் களிடமிருந்தே இந்த முறைப்பாடு அதிகம் கிடைக்கப் பெற்றுள்ளது - என்றார். (ஐ-3)

## எரிவாயு...

பவங்கள் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக இந்தக் கூட்டத் தில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப் பினர்கள் தெரிவித்துள்ளனர்.

எரிவாயு கலவையில் மேற்கொள்ளப் பட்ட மாற்றங்களே இந்த வெடிப்பிற்கு காரணமாகயிருக்கலாம் என மொரட்டுவ பல்கலைகழக நிபுணர்கள் தெரிவித்துள் ளனர் என அமைச்சர் லசந்த அலகிய வண்ண தெரிவித்துள்ளார் என ஹர்சா டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

சந்தையில் உள்ள எரிவாயு சிலிண்டர் களை உடனடியாக மாற்றுமாறு எதிர் கட்சிகளை சேர்ந்தவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்றைய சந்திப்பு முடி வுகள் எட்டப்படாமல் முடிவடைந்துள் ளது என்பதை அமைச்சர் லசந்த அலகிய வண்ண உறுதி செய்துள்ளார்.

சந்திப்பில் கலந்துகொண்ட பொலி ஸார் இதுவரை 11 வெடிப்புச்சம்பவங் கள் இடம்பெற்றுள்ளதாகவும் இதுவரை எவரும் உயிரிழக்கவில்லை எனவும் குறிப் பிட்டுள்ளனர்.

## அராலியில் இரு...

பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலை யத்தில் ஒரு வீட்டாரினால் நேற்று முறைப் பாடு பதிவு செய்யப்பட்டது.

வட்டுக்கோட்டை பொலிஸாரின் இரண்டு குழுக்கள் குறித்த வீடுகளுக்கு சென்று அடுப்பை பார்வையிட்டன.

சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே எரிவாயு அடுப்பு இவ்வாறு வெடித் துச் சிதறியதாகவும் எனினும் எவருக்கும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என சம்பவம் நிகழ்ந்த வீட்டு உரிமையாளர் கள் தெரிவித்தனர்.

# இந்திய நிதி அமைச்சரை சந்தித்த பஸில் ராஜபக்ஷ



புதுடில்லி, டிசெ. 02

நிதி அமைச்சர் பஸில் ராஜ பக்ஷவுக்கும் இந்திய நிதி மற் றும் ஒத்துழைப்பு பெறுநிறு வனங்களுக்கான அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று புதுடில்லியில் இடம்பெற்றது.

இதன்போது இரு நாட்டு பொருளாதார ஒத்துழைப்புகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு இந்தியா வழங்கிய பொருளாதார ரீதியான ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்த நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ, பொருளாதார திட்டங்களை மேலும் வலுப்படுத்துவது தொடர்பிலும் இந்திய நிதியமைச்சரின் கவனத்துக்கு கொண்டு சென் றார். (அ)

## சித்திரவதைக்கு...

சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்ட அறிக்கையின்படி, "இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் படையின ரால் தமிழர்கள் கடத்தப்பட்டு சித்திர வதைக்கு உள்ளாக் கப்பட்டதும் பெண் களுக்கு எதிராக பாலியல் வன்புறுத்தல் கள் செய்யப்பட்டதும் முன்னிலைப் படுத்தப்பட்டது.

அரசமைப்பு உரிமைகளுக்காக அர சாங்கம் பதில் கூறவேண்டும் எனக் கோரிக்கை விடுத்து தமிழர்கள் நடத்தும் போராட்டங்களுக்காகவும் 'புதிய தலை முறை' தமிழர்கள் பாதிக்கப்படுவதும் அந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட் டிருந்தது. இதுபோன்ற அடக்குமுறை களை தொடர்ந்து நடக்கவிடாமல் தடுக் கத் தவறும் பட்சத்தில் இலங்கைமீது தடைகள் விதிக்கப்படும் என்று ஐரோப் பிய ஒன்றியம் எச்சரித்திருந்தது.

கோட்டாபய ராஜபக்ஷ 2019ஆம் ஆண்டு ஜனாதிபதியாகப் பதவியேற்ற பிறகு பெரும்பாலான தமிழர்களும் முஸ் லிம்களும் பயங்கரவாதத் தடை சட்டத் தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டனர். இந்தச் சட்டத்தை பயன்படுத்தி பலரை சித்திரவதைகள் செய்ததுடன் பெண் களுக்கு எதிரான பாலியல் வன்கொடு களையும் இலங்கை படைகள் கட்ட விழ்த்து விட்டன என்றும் அந்த அறிக் கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், தொடர்ந்து நடைபெறும் கொடுமைகள் குறித்து நிபுணர்கள் கவலை தெரிவித்திருந்தனர். ஒரு சார்பாக இல் லாத தனிப்பட்ட இந்தக் கொடூர சித்திர வதைகள் தொடர்பில் விசாரிக்க வேண் டும் என்று தெரிவித்திருந்தது.

விடுதலை புலிகளுடன் தொடர்பில் இருந்தனர் எனக்கூறி பலரை இலங்கை படையினர் கடத்திச் சென்று கொடு மைப்படுத்தினர் என்றும் அந்த அறிக் கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இப் படி கொடுமை செய்யப்பட்ட 48 இடங் களையும் அந்த அறிக்கையில் நம்பகத்தன் மையுடன் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. 'வெள்ளை வான்' கடத்தல் என்று இது அழைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதில் முன்னாள் தேசிய உளவு அமைப் பின் பணிப்பாளரும், ஐ. நா. குழுவுக்கான இலங்கை தூதுக்குழுவில் இருந்தவரு மான சிசிர மெண்டிஸூக்கு தொடர்பு இருப்பதாகக் கூறப்பட்டது. உள்நாட் டுப் போர் முடிவுக்கு வந்த பிறகு நடை பெற்ற கொடூரங்கள் குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்டிருந்த ஐ. நா. குழுவில் மெண்டிஸூம்இருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது.

ஐ. நா. சித்திரவதைகளுக்கு எதிரான குழு என்பது 10 சுயாதீன நிபுணர்களை கொண்டதாகும். இது சித்திரவதைகள் மற்றும் பிற கொடுமைகளுக்கு எதிராக நாடுகளின் மனித உரிமைகள் அமைப்பு களுடன் செயல்படுகின்றது. இந்த அமைப்பு ஒவ்வொரு நான்கு ஆண்டு களுக்கு ஒருமுறை கூடி ஆராய்கிறது. இறுதியாக 2016ஆம் ஆண்டு இலங்கை தொடர்பான இறுதி அறிக்கையை வெளி யிட்டது.

ஐ. நா. சித்திரவதைகளுக்கு எதிரான நிபுணர் குழுவின் 72ஆவது அமர்வு தற் போது நடந்து வருகின்றது. நாளை வெள் ளிக்கிழமை மு. ப. 10 மணிக்கு அமர்வின் பொதுக்கூட்டம் ஜெனிவாவில் இடம் பெறவுள்ளது. (ஐ)

## பொதுப் பாதுகாப்பு...

குறிப்பிட்டுள்ளது.

பொது பாதுகாப்பு அமைச்சு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டு இதனை கூறி யுள்ளது.

ஒருங்கிணைப்பு செயலர் தொடர்பில் பல்வேறு ஊடகங்கள் வாயிலாக வெளி யான செய்திகள் தொடர்பில் விசேட விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளிடம் கோரப் பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

போர்க் காலத்தில் முல்லைத்தீவு, புதுக் குடியிருப்பு பிரதேசத்தில் புதைக்கப்பட் டதாகக் கூறப்படும் தங்கத்தை இரகசிய மாகத் தோண்டி எடுக்க முயற்சித்த அமைச் சரவை அமைச்சர்கள் இருவரின் தனிப் பட்ட பணிக்குழுவைச் சேர்ந்த செயலா ளர்கள் தொடர்பில் பொலிஸாரினால் விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள் ளது.

அவர்கள் இருவரும் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சரின் மற்றும் கடற்றொ ழில் அமைச்சின் இணைப்புச் செயலாளர் கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தொற்றால்...

திணைக்களம் தெரிவித்துள்ளது.

30 தொடக்கம் 59 வயதுக்கு இடைப் பட்ட 7 ஆண்களும், 4 பெண்களுமாக 11 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 4 ஆண்களும், 11 பெண்களுமாக 15 பேரும் உயிரிழந்தனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 372 ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ)

## தொடர்கின்றது...

பகுதியளவில் சேதம் ஏற்பட்டுள்ளதாக வும் அவர் மேலும் கூறினார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள கொடிகாமம் வடக்கு ஜே/326 கிராம சேவ கர் பிரிவுக்குட்பட்ட, சந்தை வீதியை மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா உள்ளிட்டவர்கள் நேற்று நேரடியாகச் சென்று பார்வையிட்டனர். (அ-03)

## முழங்காவிலிலும்...

பகல் 3 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உணவகத்தில் உணவு தயாரிப்பதற் காக சிலிண்டரை பயன்படுத்த முயற்சித்த போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எரிவாயு கசிவு ஏற்பட்டு, அடுப்புடன் இணைக்கும் வயர் பகுதி வெடித்துள்ளது. தீப்பற்றியபோதும், அங்கிருந்தவர்களால் தீ அணைக்கப்பட்டது. (அ)

## மாதகல் காணி அளவீடு விவகாரம்

# ஆளுநர் செயலகம் முன்பாக நேற்று மக்கள் ஆர்ப்பாட்டம்!

யாழ்ப்பாணம், டிசெ. 02

மாதகல் பகுதியில் கடற்படையினருக்காக காணி அளவீடு செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்கு முன்பாகப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

நேற்று மதியம் ஒரு மணியளவில் இடம்பெற்ற இந்த போராட்டத்தில் மாதகல் காணி உரிமையாளர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு காணி அளவீட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.




"நிலத்தை பறிப்பதும் எம் உயிரைப் பறிப்பதும் ஒன்றே", "எமது நிலம் எமக்கு வேண்டும், காணிகளை சுவீகரிக்கதே", "ஆளுநரே காணி அபகரிப்புக்கு உடந்தையாகாதே" போன்ற பல் வேறு கோஷங்கள் போராட்டக்காரர்களால் எழுப்பப் பட்டன.

போராட்டம் இடம்பெற்ற பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் புலனாய்வுப் பிரிவினரும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

# நாட்டுக்குள் நுழைந்ததா ஓமைக்ரோன்?

கொழும்பு, டிசெ. 02

ஒமைக்ரோன் பிறழ்வு நாட்டுக்குள் வந்துள்ளதா என உறுதியாகக் கூறமுடியாது என சுகாதார பிரிவு தெரிவித்துள்ளது.

மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும்போது நமது நாட்டுக்கு குறித்த வைரஸ் தாமதமாக வரக்கூடும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது தொடர்பில் உறுதியாக கூறமுடியாது. உறுதியான தகவல்கள் எமக்கு இது வரை கிடைக்கவில்லை. எனினும், உலகின் ஏனைய நாடுகளுக்கு பரவியுள்ள விதத்தை பார்க்கும்போது நமது நாட்டுக்கு குறித்த பிறழ்வு வரவில்லை என எவராலும் கூறமுடியாது. எனினும், இலங்கைக்கு தென்னாபிரிக்காவில் இருந்து நேரடியாக அதிகளவான மக்கள் வருவதில்லை. அதன் காரணமாக மற்றைய நாடுகளை விட நமது நாட்டுக்கு வருவது தாமதமாகக்கூடும். நாங்கள் ஒரு மாதிரியை எடுத்து மட்டுமே பகுப்பாய்வு செய்கிறோம். அந்த மாதிரிக்கு அகப்படும் வரையில் குறித்த வைரஸ் பிறழ்வு நாட்டில் பரவுவதற்கு வாய்ப்புள்ளது-என்றார். (அ)

# மரண அறிவித்தல்



தோற்றம்
09 - 11 - 1985

மறைவு
28 - 11 - 2021

## திருமதி குவிந்தன் ரிஷா

யாழ். கைதடியைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Zug மாநிலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குவிந்தன் ரிஷா அவர்கள் 28-11-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், இந்திரராஜா - விஜயகுமாரி தம்பதியரின் அன்பு தவப் புதல்வியும், திருமதி சின்னத்தம்பி - பார்க்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகளும் குவிந்தன் அவர்களின் அன்பு மனைவியும், ரிஷானி, கியாஸ்க் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

கிரியை
Friday, 03 Dec 2021 8:00 AM - 12:00 PM
krematorium Nordheim Käferholzstrasse 101, 8046 Zürich, Switzerland

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்

தொடர்புகளுக்கு:
**இந்திரன் (தந்தை)** : +41794882818
**ஜெயன் (உறவினர்)** : +41786551188
**சபேஸ் (உறவினர்)** : +41782252277
**கோபு (உறவினர்)** : +41786422626
**அமிலன் (உறவினர்)** : +41791531741
**இ.ரூபன்** : +94 077 4323 794

தகவல்:
**குடும்பத்தினர்.**

## அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டது முற்போக்கு கூட்டணி!

கொழும்பு, டிசெ. 02

தேர்தல் ஆணைக்குழுவினால், தமிழ் முற்போக்கு கூட்டணி ஒரு பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாக அங்கீகரிப்பட்டுள்ளது.

'ரோர்ச் லைட்' என்ற மின் சூள் சின்னம் கூட்டணியின் அதிகாரபூர்வ சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கடிதத்தை தேர்தல் ஆணைக்குழு ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா, தமிழ் முற்போக்கு கூட்டணியின் செயலாளர் சந்திரா சாப்டருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

## நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவராக நீல் டி அல்விஸ்

கொழும்பு, டிசெ. 02

நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவராக நீல் டி அல்விஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதம் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயால் நேற்றுக் காலை நெல் சந்தைப்படுத்தல் சபையின் பிரதான அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

# மோடியை சந்திக்கிறார் பஸில்

புதுடில்லி, டிசெ. 02

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கவுள்ளார் என இந்திய ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்திய சிரேஷ்ட அமைச்சர்களையும், பஸில் ராஜபக்ஷ சந்திக்கவுள்ளார் என்றும் கூறப்பட்டது. இரண்டு நாட்களுக்குள் இந்தச் சந்திப்புகள் இடம்பெறவுள்ளன. (அ)

### கல்வி TV CHANNEL-1 — 02.12.2021 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி TV CHANNEL - 2 — 02.12.2021 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
02.12.2021 வியாழக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 16

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk, news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## காணி சுவீகரிப்பின்மீதான மக்கள் எதிர்ப்பு

வடக்கில் அரசாங்கம் மேற்கொண்டுவரும் காணி அளவீடுகள் தொடர்ந்தும் மக்களால் எதிர்க்கப்பட்டு வருகின்றன. மாகாண சபை நிர்வாகம் இல்லாத நிலையில், ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் பேரிலேயே இந்த விடயங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் தற்போது ஆளுநருக்கு எதிராகவும் எதிர்ப்புக்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. அண்மையில் வவுனியாவில் திட்டமிட்ட குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பில் மக்களும் அரசியல் பிரதிநிதிகளும் இணைந்து தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். இவ்வாறான எதிர்ப்புக்கள் காண்பிக்கப்படுகின்ற போது, தற்காலிகமாக அமைதியடையும் காணி விவகாரம், மீண்டும் சில நாட்களில் தலைதூக்குகின்றது.

வடக்கு, கிழக்கில் காணி பிரச்னையென்பது தமிழர் உரிமை அரசியலுடன் பின்னிப்பிணைந்த ஒன்றாகும். தமிழ் மக்களின் தேசிய பிரச்னைக்கு ஒரு நிரந்தரமான தீர்வு இல்லாமையால்தான், காணிப் பிரச்னையும் தீர்வின்றித் தொடர்கின்றது. நிலம் – தமிழ்த் தேசிய அரசியலில் ஆணி வேராகும். தமிழர் தாயகக் கோட்பாட்டின் அடிப்படையாக நிலம் இருந்தமையால், அந்த நிலத்தை பல்வேறு வகையில் ஆக்கிரமிப்பதை சிங்கள ஆட்சியாளர்கள் ஓர் அரசியல் வேலைத்திட்டமாகவே வைத்திருந்தனர். ஆரம்பத்தில் கிழக்கு மாகாணமே இலக்கு வைக்கப்பட்டது. கிழக்கின் – திருகோணமலை மற்றும் அப்பாறை மாவட்டங்களின் இயல்பான சனத்தொகையானது, திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களால் மாற்றியமைக்கப்பட்டது. இதன் விளைவாக குறித்த மாவட்டங்களிலிருந்து சிங்கள பிரதிநிதிகள் பாராளுமன்றம் செல்லும் நிலைமை திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் இல்லாவிட்டால், கிழக்கு மாகாணம் இப்போதும் முற்றிலுமாக தமிழ் பேசும் மக்களின் – குறிப்பாக தமிழ் மக்களால் தீர்மானிக்கப்படும் ஒரு மாகாணமாகவே இருந்திருக்கும்.

கிழக்கு மாகாணத்தில் முடிந்தவரையில் காணிகள் பல்வேறு காரணங்களை முன்வைத்து கபளீகரம் செய்யப்பட்டுவிட்டன. இப்போது வடக்கின் பக்கம் ஆட்சியாளர்களின் பார்வை திரும்பியிருக்கின்றதா என்று சந்தேகப்படுமளவுக்கே நிலைமைகள் காணப்படுகின்றன. இந்த பின்புலத்தில்தான் – மாகாண சபைக்கான அரசியல் தலைமைகள் இல்லாத நிலையில், ஆளுநர்களின் மேற்பார்வையின் கீழ் இடம்பெறும் காணி அளவீடுகள் மக்கள் மத்தியில் சந்தேகங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த பிரச்னையை அரசாங்கம் – ஆளுநர்கள் எவ்வாறு கையாள வேண்டும்? மாகாண சபை தேர்தல்கள் இடம்பெறும் வரையில், வடக்கில் காணி அளவீடுகளை முற்றிலுமாக இடைநிறுத்த வேண்டும். இதுதான் இந்தப் பிரச்னைக்கான இடைக்கால தீர்வாக இருக்க முடியும். “மொட்டு“ அரசாங்கம் உள்ளக பொறிமுறை தொடர்பில் பேசிவருகின்றது. எந்தவோர் உள்ளக பொறிமுறையின் வெற்றிக்குமான முதல் படி, முதலில் அதனை பாதிக்கப்பட்ட மக்கள் நம்ப வேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் தொடர்ந்தும் சந்தேகங்களை விதைத்துக் கொண்டு – நல்லிணக்க முயற்சிகளில் ஒருபோதுமே வெற்றிபெற முடியாது. இந்த சாதாரண உண்மையை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும். இதனை வடக்கு மாகாண ஆளுநர் புரிந்துகொள்ள வேண்டும்.

வடக்கு, கிழக்கில் காணி பிரச்னையைத் தீர்க்க வேண்டுமாயின் – தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் இயல்பான – நியாயமான சந்தேகங்களை – அச்சத்தைப் போக்க வேண்டும். அது இடம்பெற வேண்டுமாயின் – மாகாண சபை தேர்தல்கள் இடம்பெற்று, வடக்கு, கிழக்கில் சுமூகமானதோர் அரசியல் சூழல் ஏற்படும் வரையில் காணி சுவீகரிப்புக்கள் தொடர்பான அனைத்து அரச நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட வேண்டும். இதனை கருத்தில்கொண்டு செயல்பட அரசாங்கம் தவறுகின்றபோது, மக்கள் மத்தியிலான சந்தேகங்களும் அச்சமும் தீரப் போவதில்லை. அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் மக்கள் மத்தியில் அச்சமும் சந்தேகமும் இருக்கும் சூழல், எப்போதும் அரசியல் பதற்றங்களுக்கான களமாகவே இருக்கும்.

# பிரான்ஸின் வரலாற்று நாயகர்கள் வரிசையில் முதல் கறுப்பின பெண்

## பாரிஸ் பந்தியோன் கல்லறையில் அவரது நினைவுப் பேழை புதைப்பு

குமாரதாஸன்

*அமெரிக்காவில் பிறந்த கறுப்பினக் கலைஞரும் சிவில் உரிமைச் செயல்பாட்டாளருமான ஜோசபின் பேக்கர் (Josephine Baker)-அவர் இறந்து சுமார் அரை நூற்றாண்டுக்குப் பின்னர் - பிரான்ஸில் மதிப்புக்குரிய வரலாற்று நாயகர்களின் வரிசையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.*

*அமெரிக்காவிலும் பிரான்ஸிலும் அவர் வாழ்ந்த நான்கு இடங்களில் சேகரிக்கப்பட்ட பிடியளவு மண் அடங்கிய பிரேதப் பெட்டி ஒன்று பாரிஸில் மதிப்புமிக்க வரலாற்றுப் பிரமுகர்கள் பலரது கல்லறைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பந்தியோன் கோவிலில் (Panthéon mausoleum) இரு தினங்களுக்கு முன்னர் புதைக்கப்பட்டது.*

*1906 ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிறந்த ஜோசபின் பேக்கர் நாஸிகளுக்கு எதிரான யுத்தத்தில் பிரெஞ்சு எதிர்ப்புப் படைப்பிரிவில் இரண்டாம் லெப்டினன்ட் என்ற பதவித்தர நிலையில் இருந்தவர். அமெரிக்காவைப் பூர்வீகமாகக் கொண்ட ஒரேயொரு பெண் வீராங்கனையாகவும் திகழ்ந்தவர்.*

*அதே சமயம் தன் வாழ் நாள் பூராகவும் பெண்ணியம், இனவெறி எதிர்ப்பு, விடுதலை போன்றவற்றின் ஓர் அடையாளச் சின்னமாகத் திகழ்ந்தவர். கறுப்பினப் பாகுபாட்டில் இருந்து தப்புவதற்காக 1925 ஆம் ஆண்டில் அமெரிக்காவை விட்டு வெளியேறி பிரான்ஸுக்கு வந்த அவர், ஒரு பொழுதுபோக்குக் கலைஞராகவும், அதேசமயம் அரசியல் போராளி யாகவும் மாறிப் பிரெஞ்சு மக்களைக்கவர்ந்தார். 1975 இல் உயிரிழந்த அவரின் உடல் மொனாக்கோவில் (Monaco) புதைக்கப்பட்டது.*

*பாடகர், நடிகர், நடனக்கலைஞர் எனப் பல்துறைக் கலைகளில் உலகெங்கும் அறியப்பட்டவரான ஜோசபின் பேக்கர் பாரிஸ் பந்தியோனில் இடம்பெறுகின்ற ஆறாவது பெண் ஆவார். அதேவேளை பிரான்ஸின் மதிப்பு மிக்க வரலாற்றுப் பிரமுகர்கள் வரிசையில் இடம் பெறுகின்ற முதலாவது கறுப்பினப் பெண் என்ற பெருமையும் அவருக்குக் கிடைக்கிறது.*

*பிரான்ஸின் வரலாற்றுப் பிரபலங்களாகிய விக்டர் ஹியுகோ (Victor Hugo) எமில் சோலா (Emile Zola) மேரி கியூரி (Marie Curie) போன்றோரின் நினைவிடங்களுக்கு அருகே இடம்பிடித்த முதலாவது பொழுது போக்குக் கலைஞர் (entertainer) என்ற மதிப்பையும் பேக்கர் பெறுகிறார்.*

*ஜோசபின் பேக்கரை பந்தியோனில் உள்வாங்க வேண்டும் என்ற நீண்ட காலக் கோரிக்கையை அதிபர் மக்ரோன் அண்மையில் ஏற்றுக்கொண்டிருந்தார். ‘தனது முழு வாழ்வையும் சுதந்திரம், நீதி என்ற இரண்டு வேட்கைகளுக்காகவும் அர்ப்பணித்தவர்’ என்பதை ஏற்றுக் கொண்டே அவருக்குப் பந்தியோனில் இடமளிக்கப்படுவதாக எலிஸே மாளிகை அண்மையில் தெரிவித்திருந்தது.*






*ஜோசபின் பேக்கருக்கு பந்தியோனில் மதிப்பளிக்கும் வைபவத்தில் அதிபர் மக்ரோன் தலைமையில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். அமெரிக்காவில் பேக்கர் பிறந்த இடமான செுன். லூயிஸ் (St. Louis) நகரம், அவர் மிகவும் நேசித்து வாழ்ந்த பாரிஸ் இல்லம், பிரான்ஸின் தென் மேற்குப் பகுதியில் அவர் வாழ்ந்த Château de Milan des மற்றும் அவரது உடல் புதைக்கப்பட்டிருக்கும் மொனாக்கோ (Monaco) ஆகிய நான்கு இடங்களில் சேகரிக்கப்பட்ட மண் அடங்கிய பேழையை வான் படை வீரர்கள் செங்கம்பளம் மீது சுமந்து பந்தியோன் கல்லறைக் கோவிலுக்குள் எடுத்து வந்தனர். இரண்டாம் உலகப் போரின் போது பிரான்ஸின் எதிர்ப்புப் படையில் (French Resistance) அவர் ஆற் றிய பங்குக்காக இந்த இராணுவ மரியாதை அவருக்கு அளிக்கப்பட்டது.*

*பிரான்ஸின் வரலாற்றில் இடம்பிடித்த அரசியல், அறிவியல், கலைத் துறைகள் சார்ந்த உன்னத மனிதர்கள் சுமார் எண்பது பேரின் கல்லறைகளைத் தாங்கிய பந்தியோன் கோவில் பாரிஸ் நகரின் மையத்தில் லத்தீன் வட்டகையில் அமைந்துள்ளது. ஜோசபின் பேக்கர் நினைவாக பாரிஸில் நிலக் கீழ் தொடருந்து நிலையங்களில் ஒன்றாகிய Gaîté (ligne 13) மெற்றோ நிலையத்தின் பெயர் "Gaîté-Joséphine Baker" என்று மாற்றப்பட்டிருக்கிறது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**டிசெம்பர் - 02 வியாழக்கிழமை**
**பிலவ வருடம் - கார்த்திகை - 16**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 10.30 - 12.00 |
| ராகு காலம் | : | 1.30 - 3.00 |
| திதி | : | திரையோதசி |




**மேடம்**
பொது வாழ்வில் உங்களின் புகழ் கூடும். உடல் ஆரோக்கியம் சீராகும். வாழ்வில் பல அனுபவம் பெற்றவர்களை சந்திப்பீர்கள். நெருங்கிய நண்பர்கள் நல்ல செய்தியை தருவார்கள்.

**இடபம்**
கூடுதலாக வருமானம் வருவதற்கு முயற்சி செய்வீர்கள். தடைகளை சமாளித்து வெற்றி காண்பீர்கள். கடன் குறையும். குடும்பத்தில் இருந்து வந்த சிரமங்கள் ஒவ்வொன்றாய் நீங்கும்.

**மிதுனம்**
மதியத்திற்கு மேல் உங்களின் மனக்குழப்பம் அகலும். செலவு குறைந்து நிம்மதி வரும். உழைப்பால் பலன் உண்டு. நல்ல செய்தி வரும் நாள். எதிரிகள் விலகுவர்.

**கடகம்**
குடும்பத்தில் குதூகலம் கூடும். உழைப்பால் உயர்வீர்கள். எந்த விஷயத்தையும் சுறுசுறுப்பாக செய்து முடிப்பீர்கள். வெளிநாட்டில் இருந்து தொலைபேசி வழியாக வரும் செய்தி மகிழ்ச்சி தரும்.

**சிம்மம்**
பணத்தேவைகள் நிறைவேறும். குடும்பத்தினருடன் இருந்த வாக்குவாதம் தீரும். உங்களுக்கு தொல்லை கொடுத்தவர்கள் விலகுவர். அனுகூலச்செய்தி வந்து சேரும். கவலை ஒன்று தீரும்.

**கன்னி**
நண்பர்களால் நல்ல விஷயம் ஒன்று நிறைவேறும் நாள். உங்களின் புகழ் கூடும். புதிய முயற்சி ஒன்று நிறைவேற ஆரம்பிக்கும். குடும்ப நிர்வாகத்தை ஒழுங்கு செய்து கொள்வீர்கள்.

**துலாம்**
அதிகமாக உழைத்துப் பலனும் கூடுதலாகப் பெறுவீர்கள். ஒன்றிற்கு மேற்பட்ட இனங்களில் வருமானம் வந்து மகிழ்விக்கும். பிறர் மீது கருணை வைத்து அவர்களுக்கு உதவி செய்வீர்கள்.

**விருட்சிகம்**
மன உறுதியோடு செயல்பட்டு பிறரை ஆச்சரியப்பட வைப்பீர்கள். இன்று வரும் செய்தி உங்களது தொழிலுக்கு துணை புரியும். வாழ்வில் முன்னேற உதவும் பொருட்களை வாங்குவீர்கள்.

**தனுசு**
துணிச்சலோடு செயல்பட்டு தொல்லையில் இருந்து மீளுவீர்கள். உங்களின் திட்டங்களை இன்று நிறைவேற்றி கொள்வீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலையை உருவாக்குவீர்கள்.

**மகரம்**
இனிய சம்பவங்கள் நடைபெறும். நண்பர்கள் சந்திப்பு உண்டு. குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய முயற்சியில் வெற்றி கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் இருந்த பயம் தீரும்.

**கும்பம்**
சகபணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைப்பதால் நிம்மதி வரும். நீண்ட நாள் ஆசைகளில் ஒன்று எதிர்பாராத வகையில் இன்று நிறைவேறும். வழக்கு சாதகமாகும். சேமிப்பில் ஆர்வம் கொள்வீர்கள்.

**மீனம்**
கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி பெறும். பணிபுரியும் இடத்தில் மற்றவர்களை அனுசரித்துச் செல்லவும். குடும்ப பிரச்னைகள் முடிவுக்கு வருவது உங்கள் கையில்தான் உள்ளது.

# அ.தி.மு.க. சட்ட விதிகளில் அதிரடி மாற்றம் பன்னீர், எடப்பாடிக்கு அதிகளவு அதிகாரம்



சென்னை, டிசெ. 02

அ.தி.மு.க. சட்ட விதிகளில் பல அதிரடி மாற்றங்களை செய்து சிறப்பு செயல்குழுவின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கட்சியின் செயல்குழுவின் கூட்டம் நேற்று நடைபெற்ற போது, இது தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதன்படி ஓ.பன்னீர் செல்வம்- எடப்பாடி பழனிசாமிக்கு அதிக அதிகாரம் வழங்க அ.தி.மு.க.அமைப்பு விதியில் முக்கிய திருத்தம் செய்து செயற்குழு கூட்டத்தில் 3 சிறப்பு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

சென்னை இராயப்பேட்டையில் உள்ள எம்.ஜி.ஆர். மாளிகையில், ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் தலைமையில் அக்கட்சியின் செயல்குழு கூட்டம் நடைபெற்றது.

இதில், அனைத்துலக எம்.ஜி.ஆர் மன்ற செயலாளராகவும், அ.தி.மு.க. ஆட்சி மன்ற குழு உறுப்பினராகவும் உள்ள தமிழ் மகன் உசேன், அக்கட்சியின் தற்காலிக அவை தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதையடுத்து மறைந்த அ.தி.மு.க அவைத் தலைவர் மதுசூதனன், எம்.ஜி. ஆரின் அண்ணன் மகள் லீலாவதி ஆகியோருக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வத்தின் மனைவி விஜயலட்சுமியின் மறைவிற்கும் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனை தொடர்ந்து, சிறப்பு தீர்மானம் உட்பட 13 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அ.தி.மு.க. பொன்விழாவை தமிழ்நாடு முழுவதும் எழுச்சியுடன் கொண்டாட, தொண்டர்களுக்கு அழைப்பு விடுப்பது, தேர்தல் வாக்குறுதிகளை தி.மு.க. அரசு நிறைவேற்றாவிட்டால் போராட்டம் நடத்துவது, பருவமழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு வழங்க அரசை வலியுறுத்துதல் மழை வெள்ள பாதிப்புகளை முன் ஏற்பாடுகள் மூலம் தடுக்க தவறிய தி.மு.க. அரசிற்கு கண்டனம் தெரிவிப்பது உள்ளிட்ட 13 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

செயல்குழு கூட்டத்தில், அதிமுக சட்ட விதிகளில் பல அதிரடி மாற்றங்களை செய்து சிறப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில், அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் கட்சியின் அடிப்படை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்றும், இந்த சட்ட திருத்தம், உடனடியாக இந்த நடைமுறை அமலுக்கு வருகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜெயலலிதா மரணம் குறித்து விசாரிக்கும் ஆணையத்துக்கு உதவ மருத்துவர் குழு

## உயர் நீதிமன்றம் அறிவிப்பு

சென்னை, டிசெ. 02

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மரணம் தொடர்பாக விசாரிக்கும் நீதிபதி ஆறுமுகசாமி ஆணையத்துக்கு உதவும் வகையில் எய்ம்ஸ் மருத்துவர்கள் அடங்கிய குழு அமைக்கப்படும் என்று உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக விசாரிக்க, ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையில் ஆணையம் அமைத்து தமிழக அரசு கடந்த 2017 இல் உத்தரவிட்டது. அப்போலோ மருத்துவர்கள் மற்றும் சாட்சிகளிடம் ஆணையம் ஓராண்டுக்கு மேல் விசாரணை நடத்தியது.

இந்நிலையில், ஆணையத்தின் விசாரணைக்கு தடை கோரியும், தங்கள் மருத்துவர்கள் விசாரணையில் இருந்து ஆஜராக விலக்கு அளிக்கக் கோரியும் உச்ச நீதிமன்றத்தில் அப்போலோ மருத்துவமனை நிர்வாகம் வழக்குத் தொடர்ந்தது.

இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், ஆணைய விசாரணைக்கு இடைக்கால தடை விதித்துள்ளது. மேலும், கடந்த நவ. 25 ஆம் திகதி நீதிபதிகள் எஸ்.அப்துல் நசீர், கிருஷ்ண முராரி ஆகியோர், "ஆணையத்துக்கு போதுமான இடவசதி, அனைத்து கட்டமைப்புகளுடன் கூடிய மாற்று இடத்தை நவ.30ஆம் திகதிக்குள் ஒதுக்க வேண்டும்" என்று உத்தரவிட்டனர்.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. தமிழக அரசு தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் துஷ்யந்த் தவே, "ஆறுமுகசாமி ஆணையத்துக்கு 700 சதுர அடியில் மாற்று இடம் ஒதுக்கப்பட்டுள்ளது" என்றார்.

அப்போலோ தரப்பில் ஆஜரானமூத்த வழக்கறிஞர் சி. ஆர்யமா சுந்தரம், "அனைத்து சாட்சிகளையும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டும்" என்றார்.

ஆணையம் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ரஞ்சித்குமார், தமிழக அரசு தரப்பு மூத்த வழக்கறிஞர் துஷ்யந்த் தவே ஆகியோர், "விசாரணையை இழுத்தடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில், அப்போலோ தனது கோரிக்கைகளை ஒவ்வொன்றாக முன்வைக்கிறது. அதை அனுமதிக்கக் கூடாது" என்றனர்.

இதையடுத்து நீதிபதிகள், "எத்தனை சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யப் போகிறீர்கள் என்பதை அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டும்" என்று அப்போலோ மருத்துவமனை தரப்புக்கு அறிவுறுத்தினர்.

# முழுமையாக குணமடைந்தார் கமல்

## மருத்துவமனை அறிக்கை

சென்னை, டிசெ. 02

கொரோனா தொற்று காரணமாக கடந்த ஒரு வார காலமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நடிகரும், மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவருமான கமல்ஹாசன் பூரணமாக குணமடைந்ததாக மருத்துவமனை நேற்று அறிவித்தது.

அமெரிக்கா சென்று திரும்பிய பின்னர் தனக்குத் தொற்று ஏற்பட்டுள்ளதாக கமல்ஹாசன் தெரிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து அவர் சென்னையில் உள்ள இராமச்சந்திரா மருத்துவமனையில் அனுசேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

தமிழக முதல்வர் ஸ்டாலின், சீமான் உள்ளிட்ட அரசியல் தலைவர்களும், திரையுலக பிரபலங்கள் பலரும் கமல்ஹாசன் விரைந்து குணமடைய வேண்டி வாழ்த்து தெரிவித்தனர். நடிகர் ரஜினிகாந்த், கமலிடம் தொலைபேசியில் பேசி, அவரது உடல்நிலை குறித்துக் கேட்டறிந்தார்.

இந்நிலையில் கமலின் உடல்நிலை குறித்து மருத்துவமனை நிர்வாகம் நேற்று அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது:

கடந்த 22ஆம் திகதி ராமசந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட கமல்ஹாசனுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. அவருக்கு லேசான கொரோனா தொற்று அறிகுறிகள் இருந்ததால் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர் தற்போது முழுமையாக குணமடைந்து விட்டார். எனினும் நாளை வரை தனிமையில் இருப்பார். நாளை மறுதினம் முதல் தனது அன்றாட வேலைகளை கமல்ஹாசன் தொடங்குவார்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# சுதந்திரக்கட்சியால் இனி மீளெழுச்சி பெறமுடியாது

## ‘மொட்டு’ கட்சி செயலர் கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 02

**“அரசின் கொள்கைத் திட்டத்தை ஏற்கமுடியாவிட்டால் கூட்டணியிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெளியேறலாம். எமது கட்சியை விமர்சிப்பதால் மீளெழுச்சி பெறலாம் என சுதந்திரக்கட்சி நினைப்பது நடக்காத காரிய மாகும்.”- என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி மீண்டும் அறிவித்துள்ளது.**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் மாநாடு அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரால் தெரிவிக்கப்பட்டுவரும் கருத்துகள் தொடர்பில் தமது கட்சியின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துகையிலேயே மொட்டு கட்சி செயலாளர் சாகர காரியவசம் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும், அந்தக் கட்சியின் உறுப்பினர்களும் கருத்து மோதலில் ஈடுபட்டுவருகின்றனர். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள்தான் ‘சுபீட்சத்தின் நோக்கு’ திட்டத்தில் உள்ளன. அவற்றை அமுல்படுத்தவே பங்காளிக்கட்சிகள் அரசுடன் கூட்டணி அமைத்தன. மக்களும் ஆணை வழங்கியுள்ளனர்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் எமது பயணத்தின்போது சில கொள்கைத் திட்டங்களை நிறைவேற்ற முயற்சிக்கையில் சர்ச்சை உருவாகலாம். உதாரணமாக உரப்பிரச்னையை எடுத்துக்கொள்ளலாம். சேதனப் பசளைத் திட்டம் சில இடங்களில் கைகூடவில்லை. இதனை பயன்படுத்தி குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பதற்கு சுதந்திரக்கட்சி முயற்சிக்கின்றது.




சிலவேளை மேற்படி திட்டம் வெற்றியளித்திருந்தால், தனது ஆட்சியில்தான் அடித்தளம் இடப்பட்டது என அறிவிப்பு விடுத்து அதற்கு மைத்திரிபால சிறிசேன உரிமை கோரி இருப்பார். தற்போது நெருக்கடி என்றதும் தமக்கும் அதற்கும் தொடர்பில்லை என காண்பித்து அரசியல் நடத்துகின்றனர். கூட்டணி அரசியலில் இவ்வாறு நடக்கக்கூடாது.

அரசின் கொள்கைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லையெனில் விலகுவதுதான் நல்லது. இரு பக்கங்களிலும் கால்களை வைத்து பயணிக்கக்கூடாது. வரப்பிரதாசங்களை அனுபவித்துக் கொண்டு, விமர்சனங்களை முன்வைக்கும் இவர்கள் பற்றி மக்கள் நன்கறிவார்கள்.

ஐக்கிய தேசியக்கட்சி பக்கம் சென்று சுதந்திரக் கட்சியின் கொள்கைகளைக் காட்டிக்கொடுத்தவர்களே இன்று அக்கட்சியை வழிநடத்துகின்றனர்-என்றார். (அ)



# இந்தியா சென்றார் பஸில்

கொழும்பு, டிசெ. 02

இரண்டு நாட்கள் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்‌ஷ நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இந்தியா சென்றுள்ளார்.

இந்த விஜயத்தின் போது பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

எரிபொருள் இறக்குமதிக்காக இந்தியாவிடமிருந்து கடன் பெற்றுக்கொள்வது மற்றும் அபிவிருத்தி விடயங்கள் குறித்து இதன்போது விவாதிக்கப்படும் என அறியமுயடிகின்றது.

கொழும்பு துறைமுக முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கான முத்தரப்பு ஒப்பந்தத்தை இந்த ஆண்டு தொடக்கத்தில் இலங்கை ஒரு தலைப்பட்சமாக ரத்து செய்தது.

இதன் காரணமாக கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவினால் கோரப்பட்ட கடன் மற்றும் மே மாதத்தில் 110 கோடி டொலர் நாணய பரிமாற்ற கொள்கைக்கு புதுடில்லி இன்னும் பதில் வழங்கவில்லை.

இவ்வாறான நிலையில் அதற்கு சமரசம் செய்யும் வகையில் கொழும்பு முனையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைளை மேற்கொள்ளத் தனியார் முதலீட்டாளரான அதானி குழுமத்தை இணைக்க இலங்கை அரசாங்கம் ஒப்புக்கொண்டிருந்தது.

இதேவேளை, எரிபொருளுக்காக இந்தியாவிலிருந்து கடனைப் பெறுவதற்கான முன் நிபந்தனையாக அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வந்ததாகவும் செய்திகள் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 02

வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினர், சாவகச்சேரி தனங்களப்பு பகுதியில் உள்ள பண்ணை வீட்டில் இருந்து நேற்று புதன்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புத்தூர் வடக்கு, ஆவரங்கால் பகுதியை சேர்ந்த சுப்பிரமணியம் சிவபாலன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனங்களப்புப் பகுதியில் தென்னம்தோட்டம் ஒன்றைப் பராமரித்து வரும் அவர், தோட்டத்துடன் இணைந்த வீட்டில் வசித்தும் வந்துள்ளார்.

இந்தநிலையில் கடந்த சில தினங்களாக அவரின் நடமாட்டத்தை அயலவர்கள் அவதானித்து இருந்த நிலையில் நேற்று வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசியது. வீட்டுக்குள் சென்று பார்த்தபோது அவர் உயிரிழந்த நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார். இவர் சில தினங்களுக்கு முன்னரே உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-03)

# பாடசாலைகளில் சேவைக் கட்டணம் அறவிடுவதை உடன் நிறுத்தவேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 02

பாடசாலைகளில் வசதிகள் மற்றும் சேவைக் கட்டணங்கள் அறவிடுவதை உடன் நிறுத்துமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொரோனா தொற்று காரணமாக நீண்ட காலமாக பாடசாலைகள் மூடப்பட்டிருந்த நிலையில், பாடசாலைகளில் முழு ஆண்டுக்குமான



வசதிகள் மற்றும் சேவைக் கட்டணங்களை அறவிடும் நிலைமை ஏற்பட் டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன் காரணமாக பெற்றோர்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கி உள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

எனவே, இரண்டு ஆண்டுகளுக்குமான வசதிகள் மற்றும் சேவைக் கட்டணங்களை அறவிடுவதை உடனடியாக நிறுத்த கல்வி அமைச்சு நட வடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

# கிழக்கு செயலணிக்கு நியமனம் செய்தமை எனக்கே தெரியாது என்கிறார் பத்திநாதன்!

கிழக்கு மாகாண தொல்பொருள் ஜனாதிபதி செயலணிக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மூவரில் எனது பெயரும் இருப்பது தொடர்பில் எனக்குத் தெரியாது என வடக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதம செயலாளர் அ. பத்திநாதன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணியில் முதலில் 13 உறுப்பினர்களும் பின்னர் மூவரும் இணைக்கப்பட்டபோதும் அனைவரும் சிங்கள இனத்தவர்களாகவே காணப்பட்டமை தொடர்பில் அதிக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இதனையடுத்து செயலணி அமைத்து 13 மாதங்களின் பின்னர் முதல் தடவையாக இரு தமிழர்களும் ஒரு முஸ்லிமும் இணைக்கப்பட்டுள்ளனர் என நேற்று முன்தினம் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில் மன்னாரைச் சேர்ந்த அ. பத்திநாதனின் பெயர் இணைக்கப்பட்டுள்ளது. வர்த்தமானி அறிவித்தல் வெளிவரும் வரை தனக்கு அது தொடர்பில் தெரியாது எனவும் இந்தத் துறையானது தனக்கு பரீட்சயம் அற்ற ஒன்று எனவும் பத்திநாதன் கூறியுள்ளார்.

# மாத்தறை வீடொன்றில் தீ! எட்டு வயதுச் சிறுமி பலி!!

கொழும்பு, டிசெ. 02

மாத்தறை வெலிகமை பிரதேசத்தில் வீடொன்று தீப்பிடித்து எரிந்ததில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த தீ விபத்தில் 8 வயது சிறுமி ஒருவரே உயிரிழந்தார்.

தீ விபத்தின்போது வீட்டுக்குள் இருந்த குறித்த சிறுமியின் பாட்டி மற்றும் சகோதரி ஆகியோர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் அறிவிக்கப்பட்டவுடன் வெலிகம பொலிஸார் தீயை அணைக்க மாத்தறை தீயணைப்பு வாகனங்களை வரவழைத்தனர் எனவும் தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை எனவும் கூறப்பட்டது.

வெலிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# மன்னார் மாவட்டத்திலும் 'ஒமைக்ரோன்' வைரஸ் பரிசோதனைகளை முன்னெடுக்க நடவடிக்கை

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

மன்னார், டிசெ. 02

**"ஒமைக்ரோன்" திரிவு வைரஸ் இலங்கையிலும் பரவி உள்ளதா என்பதற்கான தொடர் பரிசோதனைகள் மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் வடக்கு மாகாணத்தில் மன்னார் உள்ளிட்ட பகுதிகளில் பி.சி.ஆர். மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட உள்ளது என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.**

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் அவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேலும் புதிதாக 15 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு,2 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

நவம்பர் மாதம் 25 டெங்கு தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, நவம்பர் மாதம் 540 கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடம் 2,916 தொற்றாளர்களும், மாவட்டத்தில் தற்போதுவரை 2,933 கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் 5 கொரோனா தொற்றாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் 2 தொற்றாளர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளனர்.

மாவட்டத்தில் தற்போது வரை 28 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த மாதம் உயிரிழந்த ஐவரில் இருவர் எவ்வித தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளவில்லை.

மற்றைய இருவர் இரண்டாவது தடுப்பூசியை பெற்று 3 மாதங்கள் கழிந்துள்ளது.

மேலும் 60 வயதிற்கு மேற்பட்டோர் 2 தடுப்பூசிகளையும் பெற்று மூன்று மாதங்கள் கழிந்திருந்தால் அவர்களுக்கான பூஸ்டர் தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கைகள் தற்போது மன்னார் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனவே, 60 வயதுக்கு மேற்பட்டோர் 2 தடுப்பூசிகளையும் பெற்று மூன்று மாதங்கள் கழிந்திருந்தால் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தடுப்பூசி வழங்கும் நிலையங்களுக்குச் சென்று பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

மன்னார் மாவட்டத்தில் நவம்பர் மாதத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றது.

2021 ஆம் ஆண்டு தற்போது வரை மொத்தமாக 54 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 25 டெங்கு தொற்றாளர்கள் கடந்த நவம்பர் மாதம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் பனங்கட்டு கொட்டு, எமில் நகர், சின்னக் கடை, மூர்வீதி, பேசாலை 8 ஆம் வட்டாரம் போன்ற பகுதிகளில் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு,குறித்த பகுதிகள் டெங்கு தொற்று அபாயம் உள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

எனவே மக்கள் நுளம்பு பெருகும் இடங்களை அடையாளம் கண்டு அழிப்பதோடு, நுளம்பின் தாக்கத்தில் இருந்து தம்மை பாதுகாக்கும் வழிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும்.

காய்ச்சல் ஏற்படும்போது சுய சிகிச்சைகளை செய்து கொள்ளாமல் உடனடியாக வைத்திய சாலைகளுக்கு அல்லது மருத்துவர்களிடம் சென்று தமது பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டும்.

தற்போது சர்வதேச அளவில் கரிசனையை செலுத்தி உள்ள "ஒமைக்ரோன்" என்கிற வகை திரிவுடைய வைரஸ் இலங்கையிலும் பரவி உள்ளதா என்பதற்கான தொடர் பரிசோதனைகள் மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக வடமாகாணத்தில் மன்னார் உள்ளிட்ட பகுதிகளில் பி.சி.ஆர். மாதிரிகள் எதிர்வரும் மாதத்தில் சேகரிக்கப்பட்டு ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட உள்ளன-என்றார். (அ)

# மன்னாரிலும் பூஸ்டர்

மன்னார், டிசெ. 02

மன்னார் மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட இரண்டு தடுப்பூசிகளையும் பெற்று மூன்று மாதம் நிறைவடைந்தவர்களுக்கான 3 ஆவது பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தலைமையில் நேற்று புதன் கிழமை காலை தொடக்கம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை க்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் கொரோனா தடுப்பூசியின் இரண்டு டோஸ்களை பெற்ற மூத்த பிரஜைகளுக்கான மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசி செலுத்தும் பணிகளே மேற்படி முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் இராணுவத்தி னர்,விமானப் படையினர் மற்றும் சுகாதார ஊழியர்களின் ஒத்துழைப்புடன் அதிகளவானவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தடுப்பூசிகளை பெற்று வருகின்றனர்.

# முல்லைத்தீவில் ஊடகவியலாளர்மீது படையினர் தாக்குதல் நடத்தவில்லை

## இராணுவத் தலைமையகம் அறிக்கை

முல்லைத்தீவு-முள்ளிவாய்க்கால் பகுதியில் ஊடகவியலாளர் தாக்கப்பட்ட சம்பவம் குறித்த உண்மைகள் திரிபுபடுத்தப்பட்டுள்ளதாக இலங்கை இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது.

மேலும் ஊடகவியலாளர் மீது படையினர் தாக்குதல் நடத்தவில்லை எனவும் இராணுவத் தலைமையகம் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

இராணுவத்தினருடன் பேசியவாறு பின்னோக்கிச் சென்றவேளை, ஊடகவியலாளர் தனது மோட்டார் சைக்கிளின்மீது மோதி, கம்பி வேலி பொருத்தப்பட்டிருந்த இடத்தில் விழுந்தார் என இராணுவம் கூறியுள்ளது.

இதனை அடுத்து அங்கு வந்தவர்களினால் வீதியோரத்திலுள்ள பெயர்ப்பலகையை படமெடுக்கும்போது இராணுவத்தினரால் அவர் மிருகத்தனமாக தாக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டார் எனக் கூறும் அளவுக்கு வீடியோ காட்சிகள் எடுக்கப்பட்டன என்றும் இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது.

மேலும் முட்கம்பியால் சுற்றப்பட்ட பனை மட்டையால் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் எனவே சர்வதேச விசாரணை வேண்டும் என்றும் விடுக்கப்பட்ட அழைப்பு தவறானது எனவும் இராணுவம் தெரிவித்துள்ளது. (அ)

# ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இங்கு கொரோனா மரணங்கள் அதிகம்

## ராஜித சேனாரத்ன சுட்டிக்காட்டு



கொழும்பு, டிசெ. 02

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையிலேயே கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகின்றது என எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சு மீதான வரவு-செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

மேலும், ஒரு நாட்டில் ஒரு மில்லியன் பேரில் எத்தனை பேர் கொரோனா தொற்று காரணமாக மரணம் அடைந்தாரென பார்க்கும்போது எமது நாட்டில் 10 இலட்சம் பேருக்கு 664 பேர் மரணமடைந்தனர்.

குறித்த தொகை இந்தியாவில் 334 ஆகவும் மாலைதீவில் 442ஆகவும் ஆப்கானிஸ்தானில் 182 ஆகவும் பங்களாதேஷில் 160 ஆகவும் பாகிஸ்தானில் 126 ஆகவும் காணப்படுகிறது. இதன்படி ஏனைய நாடுகளை விட எமது நாட்டிலேயே அதிகமானோர் கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தனர்.

அதாவது கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதிலும் அரசியல் தலையீடுகள் இருந்தமையே இதற்கு காரணம்-என்றார். (அ)

# பாடசாலை மாணவர்களிடம் மீண்டும் சேவைக்கட்டணம் அறவிடுவது சரியா?

## சபையில் சஜித் பிரேமதாஸ கேள்வி

கொழும்பு, டிசெ. 02

நாட்டிலுள்ள சில பாடசாலைகளில் மீண்டும் மாணவர்களிடம் வசதிகள் மற்றும் சேவைக் கட்டணம் அறவிடப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் மாணவர்களிடம் இவ்வாறு வசதிகள் மற்றும் சேவைக் கட்டணம் கட்டாயமாக அறவிடுவது சரியா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றில் நேற்று உரை நிகழ்த்தும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குளியாப்பிட்டி மத்திய மகா வித்தியாலயத்தில் குடும் பத்தில் ஒரு பிள்ளை மாத்திரம் அங்கு



கல்வி கற்பாராயின் 3000 ரூபாயும், அதே குடும்பத்தில் இரண்டாவது பிள்ளையும் கல்வி கற்பார்களாயின் 1400 ரூபாயும் அறவிடப்படுவதோடு, மூன்றாவது பிள்ளை கல்வி கற்பாராயின் அவரிடமிருந்து எந்தவொரு கட்டணமும் அறவிடப்படுவதில்லை.

மேலும், இந்த விடயம் உண்மைக்கு புறம்பானது என்று கல்வியமைச்சர் நினைத்தால் இப்போதே தொலைபேசி அழைப்பொன்றை மேற்கொண்டு விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும்.

பனுவஸ்நுவர தேசிய பாடசாலையில் ஒரு மாணவரிடமிருந்த 1,560 ரூபாய் அறவிடப்படுகிறது. வாரியபொல பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றில் ஒரு மாணவரிடமிருந்து 615 ரூபாய் அறவிடப்படுகிறது. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு இன்னல் களுக்கு மத்தியில் மாணவர்க ளிடம் இவ்வாறு வசதிகள் மற்றும் சேவைக் கட்டணம் கட்டாயமாக அறவிடுவது சரியா? இது குறித்து கல்விய மைச்சர் உடனடியாக நடவ டிக்கை எடுக்க வேண்டும்-என்றார். (அ)





## தலவாக்கலையிலும் நேற்று வெடித்தது எரிவாயு அடுப்பு

கொழும்பு, டிசெ. 02

தலவாக்கலை, வோக்கர்ஸ் பகுதியில் மேல் கொத்மலை புதிய வீட்டுத் தொகுதியிலும் நேற்று முற்பகல் 10 மணியளவில் எரிவாயு அடுப்பு ஒன்று வெடித்துள்ளது.

தேநீர் தயாரிப்பதற்காக எரிவாயு அடுப்பை பற்ற வைத்த பின்பு அதனை, அணைத்துவிட்டு குறித்த நபர் வெளியில் சென்ற ஒரு நொடியிலேயே இந்த வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

வெடிப்பை அடுத்து எரிவாயு அடுப்பு முழுமையாக சேதமமைந்துள்ளது. அதன் பின்னர் எரிவாயு சிலிண்டர் உள்ளிட்ட உபகரணங்களை அகற்ற நடவடிக்கை எடுத்தாக வீட்டின் உரிமையாளர் வேலுசாமி ஸ்ரீநாத் தெரிவித்தார். (அ)

## கண்டியிலும் எரிவாயு வெடிப்பு!



கொழும்பு, டிசெ. 02

கண்டி, குண்டசாலை - நத்தரம்பொத்த பகுதியிலும் சமையல் எரிவாயு வெடித்ததில் பெண்ணொருவர் காயமடைந்துள்ளார். நேற்று அதிகாலை 3 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த பெண் சிகிச்சைகளுக்காக கண்டி தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பல்லேகல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

நாட்டில் நேற்று முன்தினமும் பல பகுதிகளில் சமையல் எரிவாயு எடுப்புச் சம்பவங்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)




# சமையல் அறைக்குள்கூட இன்று பாதுகாப்பு இல்லை

## சுட்டிக்காட்டுகிறது ஜே.வி.பி.

**கொழும்பு, டிசெ. 02**

**“தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவேன் எனக்கூறியே கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார். ஆனால், இன்று வீட்டுக்குள் சமையல் அறைக்குகூட பாதுகாப்பாக சென்றுவரமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.”-என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.**

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.



” மக்கள் மத்தியில் தற்போது உருவாகியுள்ள அச்சம் நீக்கப்பட வேண்டும். அதற்காக அரசு துரிதமாக செயற்பட வேண்டும். மாறாக குழுக்களை நியமித்து காலத்தை இழுத்தடிக்கக்கூடாது.” - எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

## சிலிண்டர்கள் வெடிக்கவில்லை!

கொழும்பு, டிசெ. 02

நாட்டில் இதுவரை எந்தவொரு எரிவாயு சிலிண்டர்களும் வெடிக்கவில்லையென பொதுஜன மெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளதாவது:

எரிவாயு அடுப்பைத் தவிர எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்கக்கூடிய சாத்தியக்கூறுகளை சுட்டிக்காட்ட வேண்டும்.

எரிவாயு கலவையில் பிரச்னை இல்லை. ஆனால் எரிவாயு அடுப்பில்தான் பிரச்னை இருக்கின்றது.

ஆகவே, எரிவாயு சிலிண்டர்களில் கவனம் செலுத்துவது போன்று எரிவாயு அடுப்புகளிலும் கவனம் செலுத்த வேண்டும்- என்றார். (அ)

## கட்சி அரசியல்தான் நாட்டை வீழ்ச்சிக்கு தள்ளுகின்றது

அர்ஜுன கூறுகிறார்



கொழும்பு, டிசெ. 02

கட்சி அரசியலே நாட்டை வீழ்ச்சி பாதைக்கு இட்டுச் செல்கிறது. ஒவ்வொரு கட்சிகளிலும் ஒவ்வொரு கொள்கை பின்பற்றப்படுகின்றது என மேலும் எதிர்காலத்தில் கட்சி அரசியல் பேதமின்றி, நாட்டின் நலன் கருதி செயல்பட தயாராகவுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அஸ்கிரிய மகாநாயக்கர் வரகாகொட ஸ்ரீ ஞானரத்தன தேரரிடம் ஆசிர்வாதம் பெற்றதன் பின்னர், ஊடகங்கள் மத்தியில் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனை குறிப்பிட்டார்.

தாம் அனைத்து கட்சிகளிலும் அங்கம் வகித்ததாகவும் தற்போது கட்சி அரசியலில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)




## எய்ட்ஸ் தினமான நேற்று வவுனியாவில் ஊர்வலம்

வவுனியா, டிசெ. 02

வவுனியாவில் உலக எய்ட்ஸ் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு வாகன ஊர்வலம் நேற்று இடம்பெற்றது.

உலக எய்ட்ஸ் தினம் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி நினைவு கூரப்படுகிறது. அந்தவகையில் இலங்கையில் இம்முறை சமத்துவமின்மையை ஒழிப்போம், எய்ட்ஸை ஒழிப்போம்,பெருந்தொற்றை ஒழிப்போம் எனும் தொனிப்பொருளில் எய்ட்ஸ் தினம் அனுஸ்டிக்கப்பட்டது.


இதனை முன்னிட்டு எயிட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று வவுனியா பொது வைத்தியசாலையின் மாவட்ட பாலியல் நோய் தடுப்புப்பிரிவின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்றது.

வவுனியா பொது வைத்தியசாலையில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் குருமன்காட்டு சந்தி ஊடாக, வைரவப்புளியங்குளம் சென்று, வவுனியா நகரம் ஊடாக மீண்டும் வைத்தியசாலையை வந்தடைந்தது.

இவ்விழிப்புனர்வு ஊர்வலத்தில் ஓட்டோ உரிமையாளர் சங்கம், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

முன்னதாக நேற்று முற்பகல் 10 மணிக்கு வவுனியா வைத்தியசாலையில் எய்ட்ஸ் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு ஒன்றும் நடைபெற்றது. இந்த செயலமர்வில் வைத்தியசாலைப் பணிப்பாளர் இ. ராகுலன், விசேட மருத்துவ நிபுணர் இளங்குமரன் மற்றும் மருத்துவர்கள் தாதிய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (அ)

> அரிசி, கோதுமை மா, சீனி, பால்மா, எரிபொருள், எரிவாயு போன்ற அத்தியாவசியத் தேவைப் பொருட்களின் விலைகள் அளவுகணக்கின்றி அதிகரித்துள்ள நிலையில் மக்கள் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் திணறுகின்றனர். இப்படியான ஒரு நிலையில் மரக்கறி, மீன் என்பவற்றின் விலை அதிகரிப்பு மக்களைப் பொறுமையின் எல்லைக்கே தள்ளிவிட்டது.



# கேள்விக்குள்ளாக்கப்படும் பசுமை விவசாயப் புரட்சி

நா.யோகேந்திரநாதன்

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவினால் இலங்கையின் விவசாயத்தில் பசுமை வேளாண்மைப் புரட்சி ஏற்படுத்தப்படப் போவதாகப் பிரகடனம் செய்யப்பட்டு இரசாயனப் பசளை இறக்குமதி முற்றாகத் தடை செய்யப்பட்டதுடன் இனி வருங்காலத்தில் சேதனப் பசளைப் பாவனையை முன்னெடுக்குமாறு ஆலோசனையும் முன்வைக்கப்பட்டது.

இரசாயனப் பசளை, இரசாயனக் கிருமி நாசினி என்பவற்றால் பொது மக்கள் பலவித நோய்களுக்கு உட்படுத்தப் படுகிறார்கள் என்ற காரணம் கூறப்பட்டே மேற்படி திடீர் தடைகள் விதிக்கப்பட்டன.

2015ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் விவசாய உற்பத்திப் பெருக்கம் என்ற போரில் பயன்படுத்தப்பட்ட அதிக இரசாயனப் பசளை, கிருமி நாசினிகள் என்பன காரணமாக வடமத்திய மாகாணத்தில் அனுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட் டங்களில் ஏறக்குறைய 1/3 பங்கு மக்கள் சிறு நீரக நோய்த் தாக்கத்துக்கு உட்படுத்தப்பட்டனர். அப்போது இந்த இரசாயனப் பசளைப் பாவனைக்குத் தடை விதிக்க வேண்டுமென்ற குரல்கள் பல தரப்பினராலும் எழுப்பப்படவில்லை. ஆனால் அவை பொருட்படுத்தப்படவில்லை.

இப்போது திடீரென்று இத்தடை விதிக்கப்பட்டமைக்கு தான் ஏற்கனவே தேர்தல் காலத்தில் பசுமை விவசாயம் தொடர்பாக வழங்கிய வாக்குறுதியே காரணம் என ஜனாதிபதி தெரிவித்திருந்தார். எனினும் நாட்டில் அந்நியச் செலவாணி பற்றாக்குறை ஏற்பட்டமையாலேயே இத்தடை விதிக்கப்பட்டதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால், போதியளவு சேதனப் பசளை இறக்குமதி செய்யப்படுமென வாக்குறுதி வழங்கப்பட்டது.

இந்த நிலையில் சீனாவிலிருந்து ஒரு கப்பலில் பசளை கொண்டு வரப்பட்டது. அதில் தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரிகள் இருப்பதாகக் கூறப்பட்டு அது இறக்குமதி செய்யப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டது. எனினும் அந்தப் பசளையின் உற்பத்தி நிறுவனம் கப்பலின் பெயரை மாற்றி விட்டு மீண்டும் வந்து இலங்கையின் கடற்பரப்பில் தரித்து நிற்கிறது. தமது சேதனப் பசளையை ஏற்றுக் கொள்ளாவிடில் கப்பல் கட்டணம், தாமதக் கட்டணம் என்பனவாக 8 கோடி டொலர் நட்ட ஈடு வழங்க வேண்டி வருமென அந்நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இன்னொருபுறம் ஏற்கனவே தடை செய்யப்பட்ட 5 கிருமி நாசினிகளின் தடைகள் அகற்றப்பட்டு விட்டதாக வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்துள்ளது. ஆனால் விவசாய அமைச்சர் இவ்வறிவித்தல் தனது அனுமதியின்றியே வெளியிடப்பட்டதாகக் கூறி அதை ரத்துச் செய்யவும் அவ்வறிவித்தலை விட்ட அதிகாரியைப் பதவி நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. அதற்கு அந்த அதிகாரி அதைத் தான் தன்னிச்சையாக மேற்கொள்ளவில்லையென்றும் விவசாய அமைச்சின் கோரிக்கைக்கு அமைவாக சட்ட மா அதிபர் வழங்கிய ஆலோசனைக்கு அமைவாகவே தான் அவ்வறிவித்தலை விடுத்ததாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இரசாயனப் பசளைகள், கிருமி நாசினிகள் என்பனவற்றின் தடை காரணமாகப் பொருங்குழப்பங்கள் நிலவி வரும் நிலையில் பல்வேறு பயிர் வகைகளின் உற்பத்தியிலும் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலில் இரசாயனப் பசளைத் தடை காரணமாக ஏற்பட்ட உற்பத்தி வீழ்ச்சி பற்றி பெருந்தோட்டத்துறை உரிமையாளர்கள் சம்மேளனத் தலைவர் தோட்டத்துறையில் பெரும் பாதிப்பு ஏற்படும் ஆபத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாகப் பல்வேறு தோட்டங்களில் தொழிலாளர்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேவேளையில் நாட்டின் பல பகுதிகளில் தமக்குரிய உரப் பசளைகளை வழங்கும்படி கோரி போராட்டங்களை நடத்தி வருகின்றனர். பெரும்போக உற்பத்திக் காலத்தில் பசளை இல்லாமையால் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்படுமென்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

தம்புள்ளை, நுவரெலியா, கொழும்பு பொருளாதார மத்திய நிலைய வர்த்தகர்கள் காய்கறிகள் வரத்து சரி பாதியாக வீழ்ச்சியடைந்து விட்டதெனவும் அவற்றின் தரம் குறைவடைந்து விட்டதாகவும் விலைகள் இரண்டு மூன்று மடங்காக அதிகரித்து விட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே அரிசி, கோதுமை மா, சீனி, பால்மா, எரிபொருள், எரிவாயு போன்ற அத்தியாவசியத் தேவைப் பொருட்களின் விலைகள் அளவுகணக்கின்றி அதிகரித்துள்ள நிலையில் மக்கள் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் திணறுகின்றனர். இப்படியான ஒரு நிலையில் மரக்கறி, மீன் என்பவற்றின் விலை அதிகரிப்பு மக்களைப் பொறுமையின் எல்லைக்கே தள்ளிவிட்டது.

இவ்வாறு விவசாயிகள், தோட்டத் தொழிலாளர் ஆகிய தரப்பினர் தொடர்ச்சியாகப் போராட்டங்களை நடத்திவரும் அதேவேளையில் தாதியர்கள் உட்பட சுகாதாரப் பணியாளர்கள், புகையிரதத் தொழிலாளர்கள், மின்சார, எரிபொருள், நீர்வழங்கல் தொழிலாளர்கள், துறைமுகத் தொழிலாளர்கள், கொலன்னாவை எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனத் தொழிலாளர்கள் எனப் பல தரப்பினரும் அடையாள வேலை நிறுத்தங்களை நடத்தியும், வேலை நிறுத்த அறிவிப்புகளை விடுத்தும் தமது எதிர்ப்புகளை வெளியிட்டும் வருகின்றனர். கடைசியாக மூட்டை தூக்கும் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரிப் போராட்டங்களை நடத்தப் போவதாகத் தெரிவித்துள்ளனர்.

மக்கள் மேல் சுமைக்கு மேல் சுமைகள் சுமத்தப்படும் நிலையில் நாட்டின் வறிய மக்கள் மட்டுமின்றி நடுத்தர மக்கள் கூட நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாத அவல நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இப்படியான குழப்பம் நிறைந்த சூழ்நிலையில் ஜனாதிபதி உயரதிகாரிகளுடன் மேற்கொண்ட கூட்டத்தில் ஒரு புதிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அவர் தனது அறிவிப்பில் சோளம், சோயா, மரக்கறி வகைகள் போன்ற உப உணவுப் பயிர்களுக்கான இரசாயனப் பசளைத் தடை நீக்கப்படுமெனவும் நெற்பயிருக்கான இரசாயனப் பசளைத் தடை நீக்கப்படாதெனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் இரசாயனப் பசளை பாவனையாளர்களுக்கு மானியங்களோ, நிவாரணங்களோ வழங்கப்படாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் இரசாயனப் பசளைக்கான தடை, கிருமி நாசினிகளுக்கான தடை என்பவற்றின் ஒரு பகுதி நீக்கப்பட்டுள்ளது.

ஒரு காலத்தில் வன்னி கிராமங்கள், குடியேற்றத் திட்டங்கள் என்பனவற்றில் ஒவ்வொரு வீட்டுக்கும் மாட்டுப் பட்டிகள் அமைந்திருந்தன. மேலும் சில பகுதிகளில் செம்மறியாட்டுப் பட்டிகளும் அமைந்திருந்தன. அப்போது பசளைத் தேவைக்குப் போதியளவு மாட்டெரு காணப்பட்டது. தற்சமயம் மாட்டுப் பட்டிகள் இல்லாமல் போய்விட்டன. பனையோலை, குழைகள், போன்றனவும் முன்புபோல் பெற்றுக் கொள்ளமுடியாது. எனவே போதுமான சேதனப் பசளை உற்பத்தி என்பது சாத்தியமில்லை. விவசாயிகள் கள்ளச் சந்தையிலாவது கூடுதல் விலைக்கு இரசாயனப் பசளைகளை வாங்கிப் பாவிப்பார்கள்.

உபஉணவுப் பொருட்களுக்கு இறக்குமதி செய்யப்படும் இரசாயனப் பசளைகளின் ஒரு பகுதி பதுக்கப்பட்டு கள்ளச் சந்தையில் விற்கப்படும் சாத்தியம் இல்லையென்று சொல்லிவிட முடியாது. எனவே நெல்லின் உற்பத்திச் செலவு அதிகரிக்கும் நிலை தவிர்க்கப் படமுடியாது. இதன் காரணமாக மீண்டும் அரிசி விலை அதிகரிப்பு, உற்பத்தி வீழ்ச்சி என்பன இடம் பெறுவது தவிர்க்கமுடி யாததாகும்.

இந்த நிலையில் கோட்டாபாயவின் பசுமை வேளாண்மையின் நிலை என்ன?

அடிப்படையில் பசுமை வேளாண்மை முயற்சி என்பது சரியான திட்டமிடலும் தூரநோக்குமின்றித் தொடங்கப்பட்டதும், அதில் ஏற்படும் பின்னடைவுகள் விவசாயிகளைத் தற்கொலை செய்யும் நிலைக்குத் தூண்டுவதும் நாடு உணவுக்கு வேறு நாடுகளிடம் கையேந்துவதுமே பலனாகக் கிடைக்க வழி கோலியுள்ளன என்பதே உண்மையாகும்.

-அருவி






## மீளுருவாக்கப்பட்ட ஆரியகுளம்

# தமிழர்களுக்கு பெருமைதரும் அரிய வரலாற்று பணி

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து வெளிவந்த தமிழ் ஊடகங்கள் தூரநோக்குடன் தமிழ் மக்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் அடையாளப்படுத்தும் மரபுரிமைச் சின்னங்களைக் கண்டறிந்து அவற்றைப் பாதுகாக்க மக்கள் அனைவரும் முன்வர வேண்டும் என்ற வேண்டுதலை முன்னெடுத்து வந்திருந்திருப்பதைக் காணமுடிகின்றது. அவ்வேண்டுதலில் ஒன்றை நிறைவு செய்திருக்கும் அரிய வரலாற்றுப் பணியாகவே இன்று யாழ்ப்பாண மாநகர சபையால் முன்னெடுத்துள்ள ஆரியகுளம் மீள்புனரமைப்புப் பணியைப் பார்க்கின்றோம்.

இது யாழ்ப்பாண நகரை அழகுபடுத்தும் இயற்கை சார்ந்த மரபுரிமைச் சின்னம் என்பதற்கு அப்பால் அது யாழ்ப்பாண அரசு கால வரலாற்றையும், பண்பாட்டையும் நினைவுபடுத்திக்காட்டும் மரபுரிமைச் சின்னம் என அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாக உள்ளது.

ஆரியகுளத்தை யாழ்ப்பாண அரசுடனும், அதன் ஆட்சியாளருடனும் தொடர்புபடுத்திக் கூறும் போது ஆரியகுளம் என்ற பெயர் எவ்வாறு வந்தது?, எப்போது வந்தது? எந்த மன்னன் காலத்திற்கு உரியது? இக்குளம் யாருக்குச் சொந்தமானது? என்பன தொடர்பாக வேறுபட்ட கருத்துக்களும், பல கேள்விகளும் மக்களிடமும், வரலாற்று ஆர்வலர்களிடமும் நீண்ட காலமாக இருந்து வருவதை நாம் அறிவோம் அதுவும் இக்குளத்தின் மீளுருவாக்கப் பணி தொடங்கிய காலத்தில் இருந்து இவ்வாறான கேள்விகள் ஊடகங்கள் பலவற்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு வந்ததையும் காண முடிகின்றது. இந்த வரலாற்று மயக்கத்திற்கு ஆரியகுளம் என்பதன் முன்னொட்டுச் சொல்லாக வரும் "ஆரிய(ர்)" என்ற சொல் பயன்பாட்டிலிருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

இதற்கு கலாநிதி ஆறு.திருமுருகன் அண்மையில் பொருத்தமான பதிலையும், விளக்கத்தையும் வழங்கியிருந்ததுடன் இதையிட்டு வரலாற்று ஆசிரியர்கள் மௌனமாக இருக்கிறார்கள் என்ற தனது நியாயமான ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியிருந்தார். அவரின் கருத்திற்கு மேலும் நம்பகரமான சான்றுகளையும், விளங்கங்களையும் எடுத்துக் கூறுவதே இச்சிறுகட்டுரையின் நோக்கமாகும்.

**ஆரியச்சக்கரவர்த்திகளும் ஆரியகுளமும்**

தமிழகத்தில் சோழரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து கி.பி. 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுச்சியடைந்த இரண்டாம் பாண்டியப் பேரரசு அதன் சமகாலத்தில் தென்னிலங்கைமீதும், வடஇலங்கை மீதும் ஆறு தடவைகளுக்கு மேல் படையெடுத்தது பற்றி அவர்கள் வெளியிட்ட சாசனங்கள் கூறுகின்றன. இப்படையெடுப்புக்களின் தளபதிகளாக, இருந்தவர்களே ஆரியச் சக்கரவர்த்திகள், சக்கரவர்த்திகள் என்ற பட்டத்தையும் பெற்றிருந்தனர். இப் பட்டங்களை படைத்தளபதிகள் அல்லது சேனாதிபதிகள் மட்டுமன்றி அரச நிர்வாகத்தில் உயர்பதவிகளில் இருந்தவர்களும் பெற்றிருந்தனர் என்பதனைப் பாண்டியர்காலச் சாசனங்கள் உறுதிசெய்கின்றன. அவற்றுள் இலங்கை மீது படை யெடுத்த ஆரியச்சக்கரவர்த்திகள் யார்? எந்த நாட்டவர்? எந்ந அரச வம்சத்திற்கு உரியவர்கள்? எந்த மொழிக்குரியவர்கள்? என்பன தொடர்பான கேள்விகளுக்கு விடைகூறுவதாகவே சிங்கள வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான

பேராசிரியர் ப. புஸ்பரட்ணம்

சூளவம்சத்தில் வரும் பின் வரும் கூற்றுக்கள் காணப்படு கின்றன:

'முன்பு பஞ்சம் ஒன்று நிலவியகாலத்திலே பாண்டிய இராச்சியத்தில் ஆட்சிபுரிந்த சகோதரர்களான ஐந்து மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்தி என்னும் பெயர் கொண்ட தமிழ்ச் சேனாதிபதியின் தலைமையில் படையொன்றை அனுப்பி வைத்தார்கள். அவன் ஆரியனல்லானாயினும், மிகுந்த செல்வாக்கும் அதிகாரமும் கொண்ட பிரதானியாக விளங்கினான். இராச்சியத்தின் எல்லாப் பக்கங்களையும் அழித்துவிட்டு அரண்கள் பொருந்திய சுபபட்டணத்தினுள் (யாப்பகூவாவிற்குள்) அவன் புகுந்தான். அங்கிருந்த தந்த தாதுவையும், விலைமதிக்கமுடியாத செல்வங்களையும் கவர்ந்து கொண்டு ஆரியச்சக்கரவர்த்தி பாண்டிநாட்டுக்குச் சென்றான். அங்கு பாண்டிய மன்னர் குலமெனும் தாமரையை மலர்விக் கின்ற கதிரவனையொத்த குலசேகர மன்னனுக்கு அவற்றைக் கொடுத்தான்."

மேற்கூறப்பட்ட கூற்றிலிருந்து ஆரியச்சக்கரவர்த்திகள் ஆரியர்கள் அல்லாத தமிழர் என்று கூறப்பட்டிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. தமிழ்ப் பேரகராதியில் ஆரியன் என்ற சொல்லுக்கு தலைவன், பிராமணன் என்ற பொருள்களும் உள்ளன.

கி.பி.13 ஆம் நூற்றாண்டிள் நடுப் பகுதியில் வடஇலங்கைமீது மேற்கொள்ளப்பட்ட இன்னொரு படையெடுப்பு பற்றிய விரிவான செய்திகளை தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியாமலையிலுள்ள 1262 ஆண்டுக்குரிய பாண்டியரது கல்வெட்டு கூறுகின்றது. அக்கல்வெட்டில் தென்னிலங்கையிலும், வட இலங்கையிலும் இரு அரசுகள் இருந்ததாகவும், சிங்கள அமைச்சன் ஒருவனது வேண்டுதலின் பேரில் பாண்டியர் வடஇலங்கைமீது படையெடுத்து ஆட்சியில் இருந்த சாவகனை அடிபணிந்து திறைசெலுத்து மாறு கோரியபோது அதை அவன் ஏற்க மறுத்ததால் அவனைக் கொன்று அவ னின் மைந்தனை ஆட்சியில் அமர்த்தி விட்டு இந்த வெற்றியின் நினைவாக தமது அரச இலட்சனையான இரட்டைக்கயல் (மீன்கள்) பொறித்த கொடிகளை கோணாமலையிலும், திரிகூடகிரியிலும் (திருகோணமலையில்) ஏற்றிவிட்டுத் திரும்பியதாகக் கூறுகின்றது.

> "தமிழ் மக்களின் மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எமது மக்களிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும் ஒருமித்த கருத்துக்கள் இருப்பதையே காணமுடிகின்றது. இது அவர்களுடன் எனக்குள்ள நீண்டகாலத் தொடர்பின் வெளிப்பாடு.

ஆயினும், இந்த வெற்றியைத் தொடர்ந்து தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் சாகவனின் மைந்தனை ஆட்சியில் அமர்த்திய பாண்டியப்படைகளே அவனை அகற்றிவிட்டு கி.பி.13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகரகக் கொண்ட யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்தனர். இதனால் இவ்வரசு பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களில் ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு என்றே அழைக்கப்படுகின்றன. இதனால் யாழ்ப்பாண அரசில் ஆட்சி புரிந்த தொடக்ககால மன்னர்கள் ஆரியச் சக்கரவர்த்திகள் என்பதை ஒரு வம்சப் பெயராகக் கொண்டு தமது பெயருடன் ஆரியன் என்ற பெயரையும் இணைத்துக் கொண்டனர். இதற்கு யாழ்ப்பாண வைபவமாலையில் கூறப்பட்டுள்ள குலசேகர சிங்கையாரியன், விக்கிரம சிங்கையாரியன், வரோதய சிங்கையாரியன், மார்த்தாணட சிங்கையாரியன், குணபூக்ஷண சிங்கையாரியன், செயவீர சிங்கையாரியன், குணவீர சிங்கையாரியன், கனக சூரிய சிங்கையாரியன் முதலான எட்டு மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடலாம் மேலும் ஆரியச்சக்கரவர்த்தி மன்னன் ஒருவன் கம்பளை அரசு மீது படையெடுத்தது பற்றிய தமிழ்க் கல்வெட்டொன்று தென்னிலங்கையில் கொணட்டகம என்ற இடத்தில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அக்கல்வெட்டிலும் படையெடுத்த மன்னனை "பொங்கொலிநீர்ச் சிங்கையாரியன்" என்றே கூறப்பட்டுள்ளது. இது மேலும் யாழ்ப் பாணவைபவமாலையில சொல்லப் பட்ட செய்தியை உறுதிசெய்வதாக உள்ளது.



(14 ஆம் பக்கம் பார்க்க...)


# புலமைச் சிகரம்



## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II
நேரம் : 1 மணித்தியாலம்



❖ 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

❖ 1, 2 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்ட உருவைப் பூரணப்படுத்த பொருத்தமான உருவைத் தெரிவு செய்க?

01) 

1)  2)  3) 


02) 




1)  2)  3) 

❖ 03, 04 ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க.

03) 

1)  2)  3) 

04) 

1)  2)  3) 


05) ஆரம்பத்தில் தரப்பட்ட சோடிச் சொற்களுக்குப் பொருத்தமான சோடிச் சொல்லைத் தெரிவு செய்க?

**கதை வளர்த்தல் - பேச்சை விரித்தல்**

1) ஆறப்போடுதல் - பிற்போடுதல்
2) அருமை பெருமை – உயர்வு தாழ்வு
3) நகமும் சதையும் - ஒற்றுமை

06) புதுமை, பத்திரிகை, தங்கம், கார்மேகம், ஆகாயம் ஆகிய சொற்களில் ஒரு சொல்லிலிருந்து ஒரு எழுத்தை மட்டும் தெரிவு செய்து உருவாக்கக்கூடிய சொல்?

1) புத்தகம் 2) பத்திரம் 3) பதக்கம்

07) 


அருகில் உள்ள கடிகார முகத்தில் உள்ள A, B ஆகிய முட்கள் 15 நிமிடங்களுக்கு முன்பு அமைந்திருந்த இலக்கங்கள் முறையே?

1) 8, 12 2) 12, 7 3) 7, 12

❖ 8, 9 ஆகிய வினாக்களில் எண்கோலத்தினை அவதானித்து வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.


08)


| | |
|---|---|
| 12 | 18 |
| 9 | 6 |


| | |
|---|---|
| 10 | 14 |
| 7 | 5 |

| | |
|---|---|
| ......... | 4 |
| 2 | 8 |

1) 2 2) 16 3) 14

09) 









1) 2 2) 3 3) 4

10) புதிய வகை யோக்கட் ஒன்றை விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றில் 2 வெற்று யோக்கட் கோப்பைகளைச் சேகரித்து வழங்கும் ஒருவருக்கு ஒரு யோக்கட்டை இலவசமாக வழங்குகிறது. 12 யோக்கட்டை வாங்கும் ஒருவர் அதன் வெற்றுக் கோப்பைகளைக் கொடுத்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய யோக்கட்களின் அதிகூடிய எண்ணிக்கை யாது?

1) 06 2) 11 3) 10

11) முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும்போது மாற்றமின்றித் தெரியும் உருத்தொகுதியைத் தெரிவு செய்க?

1)  2)  3) 

### விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01) 01 | 03) 03 | 05) 01 | 07) 03 | 09) 03 | 11) 01 |
| 02) 02 | 04) 02 | 06) 01 | 08) 02 | 10) 02 | |

# பரபரப்புக்கு மத்தியில் இன்று கூடுகின்றது சு.க. மத்திய குழு

கொழும்பு, டிசெ. 02
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட மத்திய செயல் குழுக் கூட்டம் அக்கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.
2022ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பின்போது எவ்வாறு செயற்படுவது, அடுத்தக்கட்ட அரசியல் நகர்வுகள் எவை என்பன உட்பட மேலும் சில விடயங்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டு தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசிலிருந்து வெளியேறலாம் என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. இந்நிலையில், இது பற்றியும் கலந்துரையாடப்படவுள்ளது. (இ)





## வந்தார் வர்ணகுமார; சென்றார் சமரசிங்க

கொழும்பு, டிசெ. 02
பாராளுமன்ற உறுப்பினராக மஞ்சு லலித் வர்ணகுமார, பிரதி சபாநாயகர் முன்னிலையில் நேற்று சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.
பாராளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தலைமையில் கூடியது. இதன்போது அவர் உறுதியுரை ஏற்றார்.
ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரசிங்க, அமெரிக்கத் தூதுவர் பதவிக்காக எம்.பி. பதவியை துறந்துள்ளார். அதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கே மஞ்சு லலித் வர்ணகுமார நியமிக்கப்பட்டுள்ளார். (இ)

# எரிவாயு விலையையும் அதிகரித்துவிட்டு எரிவாயு குண்டையும் வீசியுள்ளது அரசு!

## சபையில் எதிரணி குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 02
**"போர்க்காலத்தில் குண்டுகள் வெடிக்கும் என்று வெளியில் செல்வதற்கு அச்சமடைந்ததைப் போன்று, இப்போது வீட்டுக்குள் எப்போது எரிவாயு சிலிண்டர் வெடிக்குமோ என்று அச்சத்துடன் மக்கள் வாழ வேண்டியேற்பட்டுள்ளது."**

- இவ்வாறு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.
பாராளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,
"நாடு மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு இந்த அரசால் தள்ளப்பட்டுள்ளது. போர் நிலவிய காலத்தில்கூட இந்தளவுக்கு வாழ முடியாத நிலைமைக்கு மக்கள் முகம்கொடுக்கவில்லை.
போர்க்காலத்தில் வீதிகளிலும், பஸ்கள் மற்றும் ரயில்களிலும் பயணிப்பதற்கு மக்களுக்கு எங்கே குண்டு வெடிக்குமோ என்று அச்சம் இருந்தது. அதேபோன்று இப்போது வீடுகளில் இருப்பதற்கும் அச்சமாக இருக்கின்றது. எப்போது எரிவாயு வெடிக்குமோ என்ற அச்சம் காணப்படுகின்றது. சமையல் எரிவாயு விலையைப் பாரியளவில் அதிகரித்து எரிவாயு குண்டையும் மக்கள் பக்கத்தில் அரச தரப்பினர் வீசியுள்ளனர்.
இதேவேளை, சகல பொருட்களின் விலைகள் தொடர்பாக கறுப்புச் சந்தை வியாபாரிகளுக்குத் தீர்மானம் எடுக்க அனுமதியளித்துவிட்டு தினசரி விலைகளைப் பாரியளவில் அதிகரிக்கின்றனர். இந்த அரசு வந்த நாள் முதல் மக்களின் சமையல் அறைகளின் மீதே தாக்குதல் நடத்தியது. சம்பளத்தையும் வருமான வழிகளையும் தவிர மற்றைய அனைத்தினதும் விலைகளை அதிகரித்துள்ளனர்.
2019ஆம் ஆண்டில் 1,493 ரூபாய்க்குப் பெற்ற சமையல் எரிவாயு இப்போது 2 ஆயிரத்து 675 ரூபாய் வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளது.
இந்த எரிவாயு எந்த நேரத்தில் வெடிக்குமோ என்ற பயத்தில் இருக்க வேண்டியுள்ளது. போர்க் காலத்தில் வீடு திரும்பும் வரையில் வீதிகளில் ஏதாவது வெடிக்குமோ என்ற நிலைமை இருந்தது. இப்போத வீட்டுக்குள் வெடித்து விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. ஒன்று எரிவாயு சிலிண்டனை வெளியில் வைக்க வேண்டும் இல்லாவிட்டால் வீட்டார் வெளியில் இருக்க வேண்டும். இந்தப் பிரச்னையின் பாரதூரத் தன்மையை சிறிதாக எடுக்க வேண்டாம் என்று கேட்கின்றோம்.
எரிவாயு சிலிண்டர்களின் பாதுகாப்பு தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்கின்றோம்" - என்றார். (இ)

# அத்தியாவசிய மருந்துகளுக்கு எந்தவித தட்டுப்பாடும் இல்லை

## எதிரணியின் குற்றச்சாட்டுக்கு அரசு பதில்

கொழும்பு, டிசெ. 02
நாட்டில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு எந்தவித தட்டுப்பாடும் கிடையாது எனவும், அது தொடர்பான எதிர்க்கட்சியினரின் கூற்று தவறானது எனவும் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.
நாட்டில் 663 அத்தியாவசிய மருந்துகள் உள்ளன எனவும், அவற்றில் 15 மருந்துகளுக்கான குறைபாடுகள் நிலவுகின்ற நிலையில் 8 மருந்துகளுக்குப் பதில் மாற்று மருந்துகள் வழங்கப்படுகின்றன எனவும் தெரிவித்த அவர், அடுத்த வார



மளவில் மேலும் மருந்துகள் நாட்டுக்குக் கிடைக்கவுள்ளன எனவும் கூறினார்.
அந்தவகையில் நாட்டில் பெருமளவு அத்தியாவசிய மருந்துகளுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது என எதிர்க்கட்சியினர் தெரிவிக்கும் கூற்றுக்களில் எந்தவித உண்மையும் கிடையாது எனவும் அவர் சபையில் மேலும் தெரிவித்தார். (இ)

# அரச கூட்டுக்குள் மோதல் ஒப்புக்கொண்டார் டலஸ்

## அது ஆரோக்கியம் என்றும் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 02
"அரச கூட்டணி கட்சிகளிடையேயான கருத்து முரண்பாடு ஆரோக்கியமானது. அது அரசு பிளவுபட்டுள்ளதாக அர்த்தமாகாது."
- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.
ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் மோதல் காணப்படுவது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே



அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,
"ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் ஏற்பட்டுள்ள உள்ளக கருத்து முரண்பாடு அரசு இரண்டாகப் பிரியலாம் என்று கூறப்படுகின்றது. ஆனால், கூட்டணி அரசிலுள்ள அனைத்து நாடுகளிலும் இவ்வாறு முரண்பாடு ஏற்படும். 1970 - 1977 காலத்தில் சமகி பெரமுன இருந்தது. அதன் பின்னரும் கூட்டணி அரசே இருந்தது. வரலாற்றில் 1956 அரசும் கூட்டணி அரசே. அன்றும் கருத்து முரண்பாடு இருந்தது.
கட்சிகளிடையேயான கருத்து முரண்பாடு ஆரோக்கியமான நிலைமையாகவே நோக்க வேண்டும். எமது அரசின் அமைச்சர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கூட முன்வைக்கப்பட்டது. அதன் மூலம் அரசு பிரியவில்லை.
அரசுக்குள் பல்வேறுபட்ட கருத்துக்கள் முரண்பாடுகள் ஏற்படுவது ஆரோக்கியமான போக்காகும். இந்திய, பிரிட்டன் கூட்டணி அரசுகளில் கூட இந்த நிலை உள்ளது. கூட்டணி என்பதே வேறுபட்ட கருத்துகளின் கூட்டணியாகும். எதிர்க்கட்சி என்பதும் பெரிய கூட்டணியாகும்.
அங்கும் மாறுபட்ட கருத்து இருக்கிறது. அதற்காக யாரும் எதிரணி பிரியப் போகின்றது என்று சொல்வதில்லை. இது ஆரோக்கியமான ஜனநாயகத்தின் அடையாளம். அதனை விடுத்து இந்த நிலை கட்சிகளின் இறுதிக்கட்டம் எனக் கருதக் கூடாது.
அமைச்சரவையோ, ஜனாதிபதியோ, பிரதமரோ கண்டும் காணாமல் இருக்கவில்லை. டொலர் பிரச்னை பல நாடுகளுக்குச் சவாலாக உள்ளது. தொற்று நிலையில் இது மேலும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. முதலில் மக்கள் அனைவருக்கும் தடுப்பூசி வழங்க வேண்டும்" - என்றார். (இ)

# ஐ. தே. க. மறுசீரமைக்கப்படாவிடின் மாற்று வழியை நாடியே தீருவேன்!

## ரணிலுக்கு நவீன் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 02
ஐக்கிய தேசியக் கட்சி முழுமையாக மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று அக்கட்சியின் உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான நவீன் திஸநாயக்க தெரிவித்துள்ளார்.
அவ்வாறு இல்லாவிட்டால் அர்ஜுன ரணதுங்க எடுத்த முடிவையே தனக்கும் எடுக்க நேரிடும் என்ற தொனியிலும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.
ஐக்கிய தேசியக் கட்சியில் தான் வகித்த பதவிகளில் இருந்தும், உறுப்புரிமையில் இருந்தும் அர்ஜுன ரணதுங்க விலகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



மகாநாயக்க தேரர்களை நேற்றுமுன்தினம் சந்தித்து ஆசி பெற்ற அவர், விரைவில் தனது அடுத்தகட்ட நகர்வுகள் பற்றி விவரிக்கவுள்ளார். (இ)

# வயோதிபர்கள், பலவீனமானவர்கள் பயணங்களைத் தவிர்க்க வேண்டும்

## உலக சுகாதார அமைப்பு ஆலோசனை

பாரிஸ், டிசெ. 02

அறுபது வயதுக்கு மேற்பட்டோர் மற்றும் நோயின் தீவிர நிலையை எட்டக்கூடிய பல வீனமான உடல் வலுக் கொண்டவர்கள் பயணங்களைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.இவ்வாறு உலக சுகாதார அமைப்பு ஆலோசனை தெரிவித் துள்ளது.

ஆபத்தானதும் குழப்பமானது மான ஒமிக்ரோன் கோவிட் திரிபு உலகெங்கும் பரவி வருவதை அடுத்தே இவ்வாறு பயண ஆலோசனை வெளியிடப்பட்டிருக்கிறது.

இருதய நோய்கள், நீரிழிவு, புற்றுநோய் போன்றவற்றால் அவதிப்படுவோரும் மற்றும் பொதுவாக நோய் எதிர்ப்புச் சக்தி குறைவாகக் காணப்படுகின்ற வயது வரம்பை எட்டியவர்களுமே வெளிநாடுகளுக்கான பயணங்களைத் தவிர்க்குமாறு கேட்கப்



பட்டிருக்கின்றனர்.

உலக நாடுகள் கோவிட் வைரஸின் நான்காவது, ஐந்தாவது அலைகளை எதிர்கொண்டுள்ளன. இந்த சமயத்தில் தடுப்பு மருந்துகளுக்குக் கட்டுப்படாத ஒமைக்ரோன் என்னும் மிக அதிக பிறழ்வுகளை எடுக்கும் திரிபு பரவத் தொடங்கி உள்ளது. ஆபத்தான ஒமைக்ரோன் திரிபு பரவுவது பற்றிய முதல் எச்சரிக்கையை தென்னாபிரிக்கா கடந்த வாரம் வெளியிட்டது.

அதனை அடுத்து உலகின் பல நாடுகளும் தென் ஆபிரிக்கா மற்றும் அதன் அயல் நாடுகளு டனான போக்குவரத்துகளை அவசரமாகத் துண்டித்தன.

இவ்வாறு நாடுகளுக்கு இடையே எழுந்தமானமாகப் பயணத் தடை விதிப்பது வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்திவிடாது என்றும்-மாறாக நாடுகள் மீதும் அங்கு வாழும் மக்கள் மீதும் அது தேவையற்ற சுமைகளையும் பாதிப்புகளையும் ஏற்படுத்தும் என்றும் உலக சுகாதார அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

திரிபு தோன்றியதற்காக ஒரு நாட்டின் மீது தார்மீகப்பொறுப்பை சுமத்திக் குற்றம் காண்பது நாடுகள் தங்களுக்கு இடையே தொற்று நோய்கள் மற்றும் மரபு வரிசை ஆய்வுகள் (epidemiological and sequencing data) சம்பந்தமான தரவுகளை பரிமாறிக் கொள்வதைப் பாதிக்கலாம் என்று ஐ. நா. சபை எச்சரித்துள்ளது. (அ)



# பிரேசிலுக்கும் பரவியது ஒமைக்ரோன் புதிய திரிபு!

பிரேசிலியா, டிசெ. 02

பிரேசிலிலும் ஒமைக்ரோன் புதிய திரிவு கொரோனா வைரஸ் பரவியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே தொற்று நோயால் மிகப் பெரும் நெருக்கடிகளை பிரேசில் எதிர்கொண்டு வரும் நிலையில் ஒமைக்ரோன் தொற்று கண்டறியப்பட்டமை கவலைகளை ஏற்படுத்தியுள்ளது.

தென் ஆபிரிக்காவில் இருந்து சாவ் பாவ்லோவுக்கு தனது மனைவியுடன் வந்த ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இருவரது மாதிரிகளும் பெறப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் கணவர், மனைவி இருவருக்குமே ஒமிக்ரோன் திரிபு தொற்று உறுதியானது. இதையடுத்து அவர்கள் இருவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஒமைக்ரோன் புதிய திரிபால் தென்னாபிரிக்காவில் 300 வீதம் அளவுக்கு கொரோனா பரவல் அதிகரித்துள்ளது. அத்துடன், ஒரு வாரத்துக்குள் பொட்ஸ்வானா, பிரிட்டன், ஜேர்மனி, நெதர்லாந்து, டென்மார்க், பெல்ஜியம், இஸ்ரேல், இத்தாலி, செக் குடியரசு, ஹொங்கொங், அவுஸ்திரேலியா, கனடா, ஜப்பான் உட்பட பல்வேறு நாடுகளுக்கு ஒமைக்ரோன் வைரஸ் பரவியுள்ளது.

இதனையடுத்து தென்னாப்பிரிக்கா உடனான விமான சேவையை பல்வேறு நாடுகள் இரத்து செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)



# அமெரிக்க பாடசாலையில் மர்மநபர் துப்பாக்கிச் சூடு!

## 3 மாணவர்கள் பலி!!

நியூயோர்க், டிசெ. 02

அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தில் உள்ள பாடசாலையில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 3 மாணவர்கள் கொல்லப்பட்டனர். மேலும் ஆசிரியர் ஒருவர் உட்பட 8 பேர் காயம் அடைந்தனர்.

தகவலறிந்து அங்கு விரைந்து சென்ற பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்திய நபரை மடக்கிப் பிடித்து விசாரணை நடத்தி வருவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் துப்பாக்கிக் கலாசாரம் பெருகி வருகிறது. பொலிஸாரை குறிவைத்தும், பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களிலும் தொடர் துப்பாக்கி சூடு சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

இதனால் துப்பாக்கி விநியோகத்தில் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படவேண்டும் என சமூக ஆர்வலர்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இதை அடுத்து, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் துப்பாக்கிச்சூடு சம்பவங்களைக் கட்டுப்படுத்த பல்வேறு நிர்வாக உத்தரவுகளை பிறப்பித்துள்ளார். ஆனாலும், துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்கின்றன. (அ)



# பிரிட்டன் ஆளுகையிலிருந்து வெளியேறி புதிய குடியரசு நாடாகியது பார்படோஸ்!

லண்டன், டிசெ. 02

பிரிட்டன் அரசியின் ஆளுகையிலிருந்து விலகி புதிய குடியரசு நாடாக பார்படோஸ் தன்னை அறிவித் துள்ளது. இதன் மூலம் உலகின் மிகச் சமீபத்திய குடியரசு நாடாக பார்படோஸ் உருவாகியுள்ளது.

மேற்கு இந்தியத் தீவுப் பிராந்தியத்தில் அமைந்துள்ள பார்படோஸ் தீவில் கடந்த 17ஆம் நூற்றாண்டில் குடியேறிய ஆங்கிலேயர்கள், கறுப்பினத்தவர்களை அடிமைகளாக அழைத்து வந்தனர்.

கறுப்பினத்தவர்களின் உழைப்பைப் பயன்படுத்தி பார்படோஸ் தீவை செழிப்பு மிக்க பகுதியாக ஆங்கிலேயர்கள் மாற்றினர்.

இந்த நிலையில், பிரிட்டனிடமிருந்து பார்படோஸ் கடந்த 1966ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தாலும் அந்த நாடு பிரிட்டன் அரசியின் ஆளுகைக்குட்பட்டதாகவே இருந்து வந்தது.

இந்தச் சூழலில், எஞ்சியிருந்த கொலனியாதிக்க நடைமுறைகளிலிருந்து பார்படோஸ் தீவு கடந்த 2000ஆம் ஆண்டுகளில் வெளியேறத் தொடங்கியது. லண்டனைச் சேர்ந்த தங்களது அரசின் தலைமை ஆலோசனைக் குழுவைக் கலைத்துவிட்டு, ட்ரினிடாட்டைச் சேர்ந்த ஆலோசனைக் குழுவை பார்படோஸ் கடந்த 2005ஆம் ஆண்டு அமைத்தது.

இந்த நிலையில், பிரிட்டன் அரசி ஆளுகையிலிருந்து விலகி குடியரசு நாடாக பார்படோஸ் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக பார்படோஸ் தலைநகரில் நடைபெற்ற விழாவில் பிரிட்டன் இளவரசர் சார்லஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

குடியரசு நாடாக மாறினாலும் பொதுநலவாய அமைப்பில் பார்படோஸ் தொடர்ந்து அங்கம் வகிக்கும்.

பார்படோஸ் தீவு மக்கள்தொகையில் 91 வீதம் கருப்பினத்தவர்கள் ஆவர். வெள்ளை இனத்தவர்கள் 4 சதவீதமும் இந்தியர்கள் 1 சதவீதமும் அங்கம் வகிக்கின்றனர். (அ)

# கனடாவுக்குள் நுழைபவர்களுக்கு கோவிட் பரிசோதனை கட்டாயம்!

ஒட்டாவா, டிசெ. 02

ஒமைக்ரோன் புதிய திரிபு பரவலைத் தடுக்கும் முயற்சியாக அமெரிக்கா தவிர்ந்த அனைத்து நாடுகளிலும் இருந்தும் விமானம் மூலம் வரும் அனைவருக்கும் கோவிட் பரிசோதனை அவசியம் என கனடா அறிவித் துள்ளது.

கனடாவில் இதுவரை 07 பேர் ஒமிக்ரோன் புதிய திரிபு வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதார அமைச்சர் ஜீன்-யவ்ஸ் டுக்லோஸ் தெரிவித்தார்.

ஒமிக்ரோன் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ள 7 பேரில் 4 பேர் நைஜீரியாவுக்கான பயண வரலாற்றை கொண்டவர்கள் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, விமானம் மூலம் கனடா வரும் அமெரிக்கர்கள் தவிர்ந்த ஏனைய நாட்டவர்கள் கோவிட் பரிசோதனை செய்துகொண்டு அதன் முடிவுகள் வரும் வரை தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ளவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே கடந்த 14 நாட்களுக்குள் நைஜீரியா, மலாவி மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுக்குச் சென்ற வெளிநாட்டினர் கனடாவுக்குள் நுழைய தற்காலிக தடை விதிக்கப்படுவதாக கனடா போக்குவரத்து அமைச்சர் ஒமர் அல்காப்ரா தெரிவித்தார்.

தென்னாபிரிக்கா, நமீபியா, லெசோதோ, பொட்ஸ்வானா, எஸ்வதினி, சிம்பாப்வே மற்றும் மொசாம்பிக் ஆகிய நாடுகளைச் சேர்ந்தோர் மற்றும் கடந்த 14 நாட்களில் அங்கு பயணம் செய்தவர்கள் நாட்டுக்குள் நுழைய கனடா மத்திய அரசு கடந்த வாரம் தடை விதித்தது.

10 நாடுகளில் இருந்து வரும் கனேடியர்கள் மற்றும் நிரந்தர குடியிருப்பாளர்கள் முழுமையாக தடுப்பூசி போட்டிருந்தாலும் கூட கனடாவிற்குள் நுழைவதற்கு முன்பு கோவிட் பரிசோதனை செய்யப்பட வேண்டும் என சுகாதார அமைச்சர் ஜீன்-யவ்ஸ் டுக்லோஸ் தெரிவித் துள்ளார். (அ)






# டோனியை மிஞ்சிய ஜடேஜா

புதுடில்லி, டிசெ. 02

2022 ஐ. பி. எல். தொடருக்காக சென்னை அணி தக்க வைத்த வீரர்களில் டோனியை விட ஜடேஜாவுக்கு அதிக விலை கொடுக்கப்பட்டுள்ளது.

இதனால், அந்தத் தொடரில் அவர் உபதலைவராகவும், டோனி பங்கேற்காத போட்டிகளுக்கு தலைவராகவும் நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஐ. பி. எல். அணிகள் தக்கவைத்த வீரர்களின் விவரம் நேற்று முன்தினம் இரவு வெளியானது. விதிகளின்படி சென்னை சுப்பர் கிங்ஸ் 4 வீரர்களை தக்கவைத்தது. இங்கிலாந்தைச் சேர்ந்த சகலதுறை வீரர் மொயின் அலி, டோனி, ரவீந்திர ஜடேஜா, ருதுராஜ் கெய்க்வாட் ஆகியோர் தக்கவைக்கப்பட்டனர்.

இதில் முதலில் தக்கவைக்கும் வீரர் என்ற அடிப்படையில் டோனியைக் தக்கவைக்காமல் 16 கோடி இந்திய ரூபாய்க்கு ரவீந்திர ஜடேஜா தக்கவைக்கப்பட்டுள்ளார். 2ஆவது தக்கவைப்பு வீரராக ரூ.12 கோடிக்கு மகேந்திரசிங் டோனி தக்கவைக்கப்பட்டார்.

சென்னை அணி வட்டாரங்களின் தகவல்படி, "சென்னை அணி நிர்வாகம் டோனியையே முதல்வீரராக தக்கவைக்க விரும்பியது. ஆனால், அதை அவர் விரும்பவில்லை. இதனால்தான் ஜடேஜா தக்கவைக்கப்பட்டார்", என்கிறது.

இந்த ஆண்டு தொடரில் டோனி துடுப்பாட்டத்தில் பெரிதளவில் கைகொடுக்கவில்லை. இதனால், அவரின் வழிகாட்டல் மட்டுமே அணிக்கு தேவைப்படுகின்றது. இதனால் முக்கியமான போட்டிகள் தவிர, ஏனைய போட்டிகளில் ஜடேஜாவே தலைவராகக் களமிறங்கக் கூடும் என்றும் தெரியவருகின்றது. (ஐ)

# விதி மீறியிருந்தால் நடவடிக்கை; ராகுல்மீது அதிருப்தியில் பஞ்சாப்!

பஞ்சாப், டிசெ. 02



பஞ்சாப் கிங்ஸ் அணியை விட்டு கே. எல். ராகுல் வேண்டுமென்றே விலகியமையால் அந்த அணி நிர்வாகம் அதிக அதிருப்தியில் இருக்கிறது. இந்த அணியில் இருக்கும் போதே வேறு ஓர் அணியுடன் பேரம் பேசியிருந்தால் ராகுல்மீது பி. சி. சி. ஐ. விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப் அணி, அஸ்வினுக்கு பதிலாக கே. எல். ராகுலை 2020இல் அணித் தலைவராக நியமித்தது. அணியின் தலைவராகவும், துடுப்பாட்ட வீரராகவும் ராகுல் சிறப்பாக செயல்பட்ட போதும், அவரால் அணியை பிளேஒவ் சுற்றுக்கு முன்னேற்ற முடியவில்லை. இந்நிலையில் வீரர்களின் தக்கவைப்பு பட்டியல் நேற்று முன்தினம் இரவு வெளியானபோது இரு வீரர்களையே பஞ்சாப் தக்கவைத்தது. கே. எல். ராகுல் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அவரை தக்கவைக்க பஞ்சாப் அணி நிர்வாகம் விரும்பியதாகவும் ஆனால், தன்னை விடுவிக்கும்படி ராகுல் கேட்டாரெனவும் கூறப்படுகின்றது. லக்னோ அணியுடன் பேரம் பேசியமையே அணியை விட்டு வெளியேறியமைக்கு காரணம் என்று தற்போது கூறப்படுகின்றது.

இது குறித்து பஞ்சாப் அணியின் நிர்வாகிகளில் ஒருவரான நெஸ் வாடியா அளித்த பேட்டியில், " நாங்கள் கே. எல். ராகுலை தக்கவைக்க விரும்பினோம். ஆனால், அவர் தான் ஏலத்தில் பங்கேற்க விரும்புகிறார் என்று தெரிவித்தார். பஞ்சாப் அணியில் இருக்கும் போதே வேறு ஓர் அணியிடம் ராகுல் பேசியிருந்தால், அது விதிகளை மீறியதாகும். இதனால் அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோருவோம்", என்றார்.

2010ஆம் ஆண்டு ஜடேஜா தான் ஓர் அணியில் இருக்கும்போதே இன்னோர் அணியுடன் பேரம்பேசலில் ஈடுபட்டார். இதனால், அவருக்கு ஓர் ஆண்டு தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 27 வீரர்களை தக்கவைத்தன ஐ. பி. எல். இருபது-20 அணிகள்!

புதுடில்லி, டிசெ. 02

2022ஆம் ஆண்டுக்கான 15-வது ஐ. பி. எல். இருபது -20 தொடருக்கு 8 அணிகளும் சேர்ந்து 27 வீரர்களைத் தக்கவைத்துள்ளன. இதற்காக 269 கோடி இந்திய ரூபாயை செலவிட்டுள்ளன. நட்சத்திர வீரர்கள் பலரை அணிகள் கழற்றிவிட்டு ஏலத்தில் எடுக்க உள்ளன.

ஐ. பி. எல். இருபது - 20இல் 15ஆவது தொடரில் 10 அணிகள் பங்கேற்கின்றன. இதனால், வீரர்கள் ஏலம் நடக்கவுள்ளது. இந்நிலையில், ஏற்கனவே விளையாடும் 8 அணிகள் வீரர்களை 4 வீரர் களை தக்கவைக்க முடியும். அதற்கான இறுதிக்காலக்கெடு முடிவடைந்த நிலையில், தக்க வைக்கப் பட்டவர்களின் விவரங்கள் நேற்று முன்தினம் இரவு வெளியிடப்பட்டன.

இதன்படி, தக்கவைக்கப்பட்ட அணிகளின் விபரங்கள் வருமாறு,




**சென்னை சுப்பர் கிங்ஸ்**

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 4 வீரர்களைத் தக்கவைக்க 42 கோடி இந்திய ரூபாயை செலவிட்டுள்ளது. அந்த அணியிடம் மீதம் ரூ.48 கோடி கையிருப்பு இருக்கிறது. அந்த அணியின் தலைவர் எம். எஸ். டோனி 12 கோடி இந்திய ரூபாய்க்கு தக்கவைக்கப்பட்டுள்ளார்.

ரவீந்திர ஜடேஜா(16 கோடி ரூபாய்), மொயின் அலி(ரூ. 8 கோடி), ருதுராஜ் கெய்க்வாட் (ரூ. 6 கோடி) ஆகியோரைத் தக்கவைத்துள்ளது.

**டில்லி கப்பிட்டல்ஸ்**

டில்லி கப்பிட்டல்ஸ் அணி 4 வீரர்களைத் தக்கவைத்துள்ளது, இவர்களுக்காக ரூ. 39 கோடி செலவிட்டுள்ளது. மீதம் ரூ. 47.50 கோடி கையிருப்பு இருக்கிறது. அணித் தலைவர் ரிஷப் பந்த் (ரூ.16 கோடி), பிரித்வி ஷா (ரூ. 7.5 கோடி), அக்ஸர் பட்டேல் (ரூ.9 கோடி), அன்ட்ரிச் நோர்ட்ஜே (ரூ.6.5 கோடி) தக்கவைத்துள்ளது.

**கொல்கத்தா நைற் ரைடர்ஸ்**

கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி 2 உள்நாட்டு, 2 வெளிநாட்டு வீரர்களைத் தக்கவைத்துள்ளது, இதற்காக ரூ. 42 கோடி செலவிட்டுள்ளது. கையிருப்பாக ரூ.48 கோடி இருக்கிறது. சுனில் நரைன் (ரூ. 6 கோடி), அந்த்ரே ரஸல்(ரூ. 12 கோடி), வருண் சக்ரவர்த்தி (ரூ. 8 கோடி), வெங்கடேஷ் ஐயர் (ரூ. 8 கோடி) ஆகியோரைத் தக்கவைத்துள்ளது.

**மும்பை இந்தியன்ஸ்**

மும்பை இந்தியன்ஸ் ஒரு வெளிநாட்டு வீரர், 3 உள்நாட்டு வீரர்களைத் தக்கவைத்துள்ளது. இதற்காக ரூ. 42 கோடி செலவிட்டுள்ளது. கையிருப்பாக ரூ. 48 கோடி இருக்கிறது. அணித் தலைவர் ரோஹித் சர்மா (ரூ. 16 கோடி) ஜஸ்பிரித் பும்ரா (ரூ. 12கோடி), கிரன் பொலார்ட் (ரூ. 6 கோடி), சூர்யகுமார் யாதவ் (ரூ.8 கோடி) ஆகியோர் தக்கவைக்கப்பட்டனர்.

**பஞ்சாப் கிங்ஸ்**

பஞ்சாப் கிங்ஸ் அணி 2 உள்நாட்டு வீரர்களை மட்டுமே தக்கவைத்துள்ளது. இதற்காக ரூ. 16 கோடி மட்டுமே செலவிட்டுள்ளது கையிருப்பாக அதிகபட்சமாக ரூ. 72 கோடி வைத்துள்ளது. ஏலத்தில் பல புதிய வீரர்களை எடுக்கவும், அணியை வலுவாகத் தயாரிக்கவும் முடிவு செய்துள்ளது. வேகப்பந்து வீச்சாளர் அர்ஷ்தீப் சிங் (ரூ. 4கோடி) மயங்க் அகர்வால் (ரூ. 12கோடி) இருவர் மட்டுமே தக்கவைக்கப்பட்டனர்.

**ராஜஸ்தான் றோயல்ஸ்**

ராஜஸ்தான் றோயல்ஸ் அணி ஒரு வெளிநாட்டு வீரர் உள்பட 3 வீரர்களைத் தக்கவைத்துள்ளது. இதில் இங்கிலாந்து வீரர் ஜோஸ் பட்லர் (ரூ. 10கோடி), அணித் தலைவர் சஞ்சு சாம்சன் (ரூ. 14 கோடி), யாஹஸ்வி ஜெய்ஸ்வால் (ரூ. 4 கோடி) ஆகியோர் தக்கவைக்கப்பட்டனர். இவர்களுக்காக ரூ.28 கோடி செலவிட்டுள்ளது, கையிருப்பாக ரூ.62 கோடி வைத்துள்ளது.

**சன்ரைசர்ஸ் ஹைதராபாத்**

சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 2 உள்நாட்டு வீரர்கள், ஒரு வெளிநாட்டு வீரர் என 3 வீரர்களைத் தக்கவைத்துள்ளது. நியூசிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சன் (ரூ. 14 கோடி), உம்ரான் மலிக் (ரூ. 4 கோடி), அப்துல் சமது (ரூ. 4 கோடி). இவர்கள் 3 பேருக்காக ரூ. 22 கோடி செலவிட்டுள்ளது. கையிருப்பாக ரூ.68 கோடி உள்ளது.

**பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்**

பெங்களூர் அணி 3 வீரர்களைத் தக்கவைத்துள்ளது. தலைமை பதவியைத் துறந்த விராட் கோலி (ரூ. 15 கோடி), கிளென் மக்ஸ்வெல் (ரூ. 11கோடி), முஹமது சிராஜ் (ரூ.7கோடி) ஆகியோர் தக்கவைக்கப்பட்டனர். இவர்களுக்காக ரூ. 33 கோடி செலவிட்டுள்ளது. அந்த அணியின் கையிருப்பாக ரூ.57 கோடி இருக்கிறது. (ஐ)

# மேற்கிந்தியாவுடனான டெஸ்ட் இலங்கை அணி தடுமாற்றம்!

காலி, டிசெ. 02

ரமேஷ் மெண்டிஸின் அபாரமான பந்துவீச்சின் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணியை 253 ஓட்டங்களுக்கு சுருட்டியது இலங்கை.

இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் காலியில் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று நடந்தது.

நேற்று முன்தினம் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 69 ஓட்டங்களை எடுத்திருந்த போது இரண்டாம்நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. பிராத்வெயிட் 22, பொன்னர் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் ஆரம்பமானபோது அவர்கள் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர். இந்த இணை சிறப்பாக துடுப்பெடுத்தாடியது. 135 பந்துகளை சந்தித்த பிராத்வெயிட் 50 ஓட்டங்களைப் பெற்றார். அவர் 6 பௌண்ட்ரிகளுடன் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார்.

அவருக்கு துணையாக ஆடிய பொன்னர் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, பிராத்வெயிட் 9 பௌண்ட்ரிகளுடன் 72 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். பின்னர் வந்தவர்களில் ஷாய் ஹோப் 22, வீராசாமி பெருமாள் 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

104.2 ஓவர்களில் மேற்கிந்தியத் தீவுகளின் சகல விக்கெட்களும் வீழ்த்தப்பட்டன. அப்போது அந்த அணி 253 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

கைல் மேயர் மட்டும் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இலங்கையின் பந்துவீச்சில் ரமேஷ் மெண்டிஸ் அசத்தலாகப் பந்துவீசி 6 விக்கெட்களை சாய்த்தார். 34.4 ஓவர்கள் பந்துவீசிய அவர் 70 ஓட்டங்களை விட்டுக் கொடுத்திருந்தார். இதுவே, அவரின் டெஸ்ட் கிரிக்கெட் வாழ்வில் சிறந்த பெறுபேறாக அமைந்தது. லசித் எம்புல்தெனிய, பிரவீன் ஜெயவிக்கிரம ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்பத்திலேயே தடுமாற ஆரம்பித்துள்ளது.




தொடக்கம் கொடுத்த நம்பிக்கை நட்சத்திரமான திமுத் கருணாரத்ன வெறும் 6 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆனார். பின்னர் வந்த ஒஷத பெர்னாண்டோவும் 14 ஓட்டங்களுடன் ரன் அவுட் ஆனார்.

நேற்றைய நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தபோது இலங்கை அணி 2 விக்கெட்கள் இழப்புக்கு 46 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பதும் நிசங்க 22 ஓட்டங்களுடனும், சரித் அசலங்க 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இன்று போட்டியின் நான்காம் நாள் ஆட்டமாகும். (ஐ)



# டயானாவுக்கு தலைவர் பதவி

## பிரதித் தலைவரானார் அரவிந்குமார்

கொழும்பு, டிசெ. 02

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இலங்கை - தென்னாபிரிக்க பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே தெரிவுசெய்யப்பட்டார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இலங்கைக்கான தென்னாபிரிக்காவின் உயர்ஸ்தானிகர் சண்டைல் எட்வின் சல்க் இக்கூட்டத்தில் விசேட விருந்தினராகக் கலந்துகொண்டார். பல்வேறு அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான அ.அரவிந்குமார், வீரசுமண வீரசிங்ஹ மற்றும் மர்ஜான் பலீல் ஆகியோர் இந்த நட்புறவு சங்கத்தின் பிரதித் தலைவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் செயலாளராகவும், பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் உதவிச் செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் இலங்கை - தென்னாபிரிக்க பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் பொருளாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இலங்கை - தென்னாபிரிக்கா பாராளுமன்ற நட்புறவுச் சங்கம் இரு நாடுகளுக்கும் இடையில் பல தசாப்தங்களாக நிலவும் நல்லுறவை மேலும் மேம்படுத்தும் என இங்கு உரையாற்றிய சபாநாயகர் தெரிவித்தார். (இ)

# இராணுவத்தினரின் தாக்குதலுக்குள்ளான செய்தியாளருக்கு நீதி கிடைக்க வேண்டும்!

## சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 02

**"முள்ளிவாய்க்காலில் ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு எமது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இது தொடர்பாக சுயாதீனமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நியாயம் கிடைப்பதற்கான வழிமுறைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை உரிய அதிகாரிகள் மற்றும் அரசிடம் நாம் கேட்டுக்கொள்கின்றோம்."**

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"கடந்த நவம்பர் 27ஆம் திகதி முள்ளிவாய்க்கால் பகுதியில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் இலங்கை இராணுவத்தினரால் மூர்க்கத்தனமாக தாக்கப்பட்ட சம்பவம் கண்டனத்துக்குரியதும் மிகவும் கீழ்த்தரமானதுமாகும்.

குறித்த தினத்தில் முள்ளிவாய்க்கால் பகுதியில் தனது பணியைச் செய்துகொண்டிருந்த வேளை இராணுவத்தினர் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கேட்டுக்கொண்டதையடுத்து தனது அடையாள அட்டையைக் காண்பிக்க முற்பட்ட வேளையே தாக்கப்பட்டார் என்று அறிகின்றோம்.

இந்தத் தாக்குதலை மேற்கொண்ட இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு பின்பு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதும் வெறுமனே ஒரு கண்துடைப்பு சம்பவமாகவே நாம் காண்கிறோம்.



இந்த விடயம் தொடர்பாக எமது கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இது தொடர்பாக சுயாதீனமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நியாயம் கிடைப்பதற்கான வழிமுறைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை உரிய அதிகாரிகள் மற்றும் அரசிடம் நாம் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ்வாறான சம்பவங்கள் ஊடகத்துறைக்குப் பெரும் சவாலாக அமைகின்றது. அண்மைக்காலங்களில் பல்வேறு தரப்பினருக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் போலவே குறித்த இந்தச் சம்பவமும் தமிழ் ஊடகவியலாளர்களை அச்சுறுத்துவதாகவும் அவர்களது ஊடக சுதந்திரத்தைப் பறிப்பதாகவும் அமைகின்றது.

தொடர்ச்சியாக நடைபெறும் இவ்வாறான விடயங்கள் குறித்து நாம் தொடர்ந்தும் அவதானமாக இருந்து பாதிக்கப்படுவோருக்காக எப்போதும் நாம் குரல் கொடுப்போம்" - என்றுள்ளது. (இ)

# தமிழர்களுக்கு பெருமைதரும்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இவ்வாதாரங்கள் யாழ்ப்பாண அரசுகால மன்னர்களின் பெயர்களுடன் ஆரியன் என்ற சொல்லும். இணைந்துள்ளதைக் காட்டுகின்றது.

ஆரியச்சக்கரவர்த்திகளால் தோற்றுவிக்கப்பட்ட யாழ்ப்பாண அரசைக் காலப்போக்கில் சுதேச மன்னர்களும் ஆட்சி செய்தனர் இவ்வரசு போத்துக்கேயரால் வெற்றி கொள்ளப்படும் வரை (1619 இல்) ஏறத்தாழ 350 ஆண்டுகள் சுதந்திர தமிழரசாக ஆட்சியில் இருந்துள்ளது. இவ்வரசின் வரலாற்றை விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் சி.பத்மநாதன் இலங்கைத் தமிழர் பண்பாடு தனித்துவமாக வளர்வதற்கு யாழ்ப்பாண அரசு ஒரு முக்கிய காரணம் எனக் கூறியிருப்பதுடன் அவ்வரசு காலத்தில் தமிழ் மொழி, சைவசமயம், இலக்கியம், இசை, நடனம், நாடகம், சோதிடம், வைத்தியம், விவசாயம், வெளிநாட்டு வர்த்தகம், இராணுவக்கட்டமைப்பு என்பனவும் வளர்சியடைந்திருந்ததாகவும் குறிப்பிடுகின்றார். கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் எழுந்த ராஜவலிய என்ற சிங்கள வரலாற்று இலக்கியம் சமகாலத்தில் ஆட்சியிலிருந்த றைகம, கம்பளை, யாழ்ப்பாண அரசுகள் பற்றிக் குறிப்பிட்டு அவற்றுள் யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகளின் அரசே படைப்பலத்திலும், பொருளாதார வளத்திலும் மேலோங்கி இருந்ததாகவும் அவ்வரசு மலைநாடு தொட்டு தாழ்நிலப் பகுதிவரை ஒன்பது துறைமுகங்களில் இருந்து திறை பெற்றதாகவும் கூறுகின்றது.

பொதுவாக ஒரு நாட்டில் அல்லது ஒரு வட்டாரத்தில் ஆட்சிபுரிந்த அரச வம்சங்கள் மற்றும் ஆட்சியாளர்களின் பெயர்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடப்பெயர்களுடனும், அவர்களது வரலாற்றுப் பணிகளுடனும் இணைந்துப் பேசப்படுவதுண்டு. இவ் வரலாற்று நினைவுகள் பிற்காலத்தில் தொடர்நத்தற்கும், காலப்போக்கில் மறைந்ததற்கும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இங்கே யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்த ஆரியச்சக்கரவர்த்திகள் தமிழகத்தில் இராமநாதபுரம் செவ்விருக்கை நாட்டு ஆரியச்சக்கரவர்த்தி நல்லூரரை வாழ்விடமாகக் கொண்டவர்கள் எனப் பாண்டிய சாசனங்களும், பிற வரலாற்று மூலங்களும் உறுதிசெய்கின்றன. இவர்கள் இராமேஸ்வரம் சேதுதலத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தால் இவர்கள் சேதுகுலம் எனவும் அழைக்கப்பட்டனர். இச்சேதுகுலத்தையும், சேது தலத்தையும் நினைவுபடுத்தும் வகையில் யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த ஆரியச்சக்கரவர்த்திகள் தாம் வெளியிட்ட நாணயங்களிலும், கல்வெட்டுக்களிலும், அரச கொடிகளிலும் சேதுவை ஒரு மங்கல மொழியாகப் பயன்படுத்தினர். இச்சொல் இன்றும் யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த ஆரியச்சக்கரவர்த்திகளின் முக்கிய வரலாற்று அடையாளமாகப் பார்க்கப்படுகின்றது.

மேலும் ஆரியச்சக்கரவர்த்திகள் வாழ்ந்த தென்தமிழகத்தில் அதிலும் குறிப்பாக பாண்டியரின் ஆதிக்கம் நிலவிய இடங்களில் ஆரியகுளம், ஆரிய நல்லூர், ஆரியச்சக்கரவர்த்தி நல்லூர், ஆரியகவுண்டனனூர், ஆரியக்கவுண்டன் வளவு முதலான பெயர்கள் பரந்த பிரதேசத்திற்குரிய இடப்பெயர்களாக உள்ளன. வரலாற்றுப் பழமைவாய்ந்த இவ்விடப்பெயர்கள் தற்காலத் தமிழகத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் பெயர்களாகவும் இருந்துவருகின்றன. இப்பெயர்கள் ஆரியச்சக்கரவர்த்திகளின் நிர்வாகத்திற்கு உட்பட்டிருந்ததன் காரணமாகத் தோன்றியவை எனக் கூறப்படுகின்றது. அதிலும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம் என்ற அதே பெயர் தென்தமிழகத்தில் ஒரு உள்ளூராட்சி மன்றத்தின் பெயராக இருப்பது யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம் ஆரியச்சக்கரவத்திகளின் ஆட்சியை நினைவுபடுத்த தோன்றியதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்னர் (1913ஆம் ஆண்டு) 'ஈழநாடும் தமிழ்ச் சங்கமும்' என்ற நூலில் அமரர் முத்துத்தம்பிப் பிள்ளை அவர்கள் குணபூஷண சிங்கையாரியனின் அமைச்சன் ஒருவன் ஆற்றிய பணிகள் பற்றி விரிவாகக் கூறும்போது குணபூஷணசிங்கையாரியனின் பெயரில் ஆரியகுளமும், அவனது மனையும் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். மேலும் அவர் இம்மன்னன் காலத்தி லேயே 63 நாயன்மார்களுக்கு நாயன்மார்கட்டில் ஆலயம் அமைக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

அண்மையில் நாயன்மாரக்கட்டு ஆலயத் திருக்குளம் மீளுருவாக்கம் செய்யப்பட்டபோது ஓர் அரிய தமிழ்க் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டு அது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு காலத்தால் சற்றுப் பிற்பட்டதாக இருப்பினும் அக்கல்வெட்டில் இவ்வாலயத் திருக்குளத்தை அமைத்தவன் சிங்கையாரியன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாதரங்களை வைத்துப் பார்க்கும் போது ஆரியகுளம் என்ற பெயர் யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்த ஆரியச்சக்கரவரத்திகளின் ஆட்சியை நினைவுபடுத்திக் காட்டும் ஒரு மரபுரிமைச் சின்னம் என்பது உறுதியாகத் தெரிகின்றது. இதை மறுதலித்துக் கூறுவதற்கு வேறு எந்த ஆதாரங்களும் காணப்படவில்லை.

மரபுரிமைச் சின்னம் என்பது அது சார்ந்த இனத்தின், பண்பாட்டின் அடையாளம், ஆணிவேர் எனப் பார்க்கப்படுகின்றது. விலைமதிக்க முடியாத இம்மரபுரிமைச் சொத்துக்களைச் சிறிதும் பிசகாமல். எதிர்காலச் சந்ததியிடம் கையளிக்க வேண்டிய நம்பிக்கை நாற்றுக்களாவும் இவை காணப்படுகின்றன. தமிழ் மக்களின் மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எமது மக்களிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும் ஒருமித்த கருத்துக்கள் இருப்பதையே காணமுடிகின்றது. இது அவர்களுடன் எனக்குள்ள நீண்ட காலத் தொடர்பின் வெளிப்பாடு. இன்று நிறைவு பெற்றுள்ள ஆரியகுள மீளுருவாக்கம் என்பது எமது மரபுரிமைச் சின்னங்களை நாமே பாதுகாக்க முடியும் என்பதன் ஒரு அடையாளமாகவும், தொடக்கப் புள்ளியாகவும் பார்க்கப்படலாம். எதிர்காலத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஆரியகுள மீளுருவாக்கப்பணி ஒரு முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்பதே அனைத்து தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். ■

ஈழநாடு
Eelanadu

# வடக்கில் வைத்தியசாலைகளை சுவீகரிக்கும் செயல்பாட்டை அரசு உடன் கைவிட வேண்டும்

## சுகாதார அமைச்சரிடம் வினோ எம்.பி. கோரிக்கை

கொழும்பு, டிசெ. 02

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி வைத்தியசாலைகளை மத்திய அரசு சுவீகரிக்கின்ற செயல்பாட்டை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகராதலிங் கம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற சுகாதார அமைச்சு மற்றும் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய் கள் மற்றும் கொரோனா நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இரா ஜாங்க அமைச்சு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு அமைச்சரிடம் நேரடியாகக் கோரிக்கை விடுத்த அவர், மேலும் கூறுகையில்,

மாகாண சபைகளின் கீழிருந்த பல அதிகாரங்கள் திட்டமிடப் பட்டு மத்திய அரசால் பறிக்கப்படு கின்ற, மீளப் பெறப்படுகின்ற ஒரு துரதிர்ஷ்டவசமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக மாகாண சபைகளுக்கு இருக்கின்ற நிதி, பொலிஸ், காணி அதிகாரங்கள் அரசமைப்பில் எழுத்து வடிவத்தில் மட்டுமே உள்ளன. நடைமுறையில் அவை எல்லாம் மாகாண சபைகளிடமிருந்து பிடுங்கப்பட்டு மரத்துக்குச் சேர்க்கப்பட்டுள்ளன.

அதேபோல்தான் மாவட்ட வைத்தியசாலைகளும் கடந்த ஆண்டிலிருந்து மாகாண சபைக ளிடமிருந்து பறிக்கின்ற நிலை மையை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக இந்த நாட்டிலுள்ள 9 மாவட்ட பொது வைத்தியசாலை களை மாகாணத்திலிருந்து பறித்தெடுத்து மத்திய அரசின் கீழ் கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடை பெற்று வருகின்றன.

அந்த 9 மாவட்ட பொது வைத்தியசாலைகளில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி வைத்தியசாலைகளை மத்திய அரசு சுவீகரிக்கின்ற செயல்பாட்டை மாற்றியமைக்குமாறு சுகாதார அமைச்சரிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

அதேபோல் பாடசாலைகள் தேசிய பாடசாலைகள் என்ற இனிப்பு முலாம் பூசப்பட்டு பல பாடசாலைகளை மத்திய அரசு உள்வாங்கியதையும் நான் நினைவுபடுத்த விரும்பு கின்றேன். இவ்வாறான நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டும்.

மாகாணங்களுக்கு அதிகாரங் களை வழங்கிவிட்டுப் பின்னர் அவற்றில் பறித்தெடுக்கின்ற செயல் பாட்டை அரசு முழுமையாகக் கைவிட வேண்டும். மாகாணங்களுக்கு அதிகாரங்கள் பகிரப்பட்ட வேண்டுமென்ற பல்வேறு தரப்பின ரின் கோரிக்கைகள் உதாசீனப்படுத் தப்படுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை - என்றார். (இ)

# வாகன விபத்தை ஏற்படுத்தி பணம் பெற்ற நபர் கைது!

கொழும்பு, டிசெ. 02

கொழும்பில் வாகன விபத்துக்களை ஏற்படுத்தி பணம் பெற்ற நபர்கள் தொடர்பில் பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வேண்டுமென்றே தனது ஓட்டோவை மற்ற வாகனங்களுடன் மோத வைத்து மிரட்டி பணம் பெற்ற சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் ஒருவர் கல்கிசை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவர், இரண்டு மாதங்களுக்குள் 15 சாரதிகளிடம் இருந்து 3 இலட்சம் ரூபாயை இவ்வாறு மிரட்டி பெற்றுள்ளார். (அ)

## மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26 - 08 - 1983 | 20 - 11 - 2021 |

### நல்லையா சிவரூபன்

யாழ். மயிலங்கூடலைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Créteil ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிவரூபன் நல்லையா அவர்கள் 20.11.2021 சனிக்கிழமை அன்று அகால மரணம் அடைந்தார்.

அன்னார், நல்லையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும், தெய்வேந்திரம், காலஞ்சென்ற செல்லம், கிருபாசக்தி, சரோஜினிதேவி (மணி), தெய்வநாயகி (அஞ்சலி), சகுந்தலதேவி ஆகியோரின் பெறாமகனும், சிதம்பரநாதன் (நாதன்) அவர்களின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 03.12.2021 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.30 மணிமுதல் நண்பகல் 12.30 மணி வரை Funérarium 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France என்ற இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு, நண்பகல் 12.30 மணிமுதல் நண்பகல் 1.30 மணிக்குள் Cimetière Intercommunal des Joncherolles 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France என்ற இடத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும். அத்துடன் 03.12.2021 வெள்ளிக்கிழமை அன்று அஞ்சலி நிகழ்வுகள் நகுலேஸ்வரா வீதி, பன்னாலையில் உள்ள செல்வா மற்றும் கலா என்பவர்களது இல்லத்திலும் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
**சசிகலா (சகோதரி)** - 0033781142673
**லக்ஷ்மன் (மைத்துனர்)** - 0033768994574
**கருணகலா (சகோதரி)** - 0777494840
**சிதம்பரநாதன் (மாமா)** - 0033767612405

தகவல்: **சகோதரிகள்: சசிகலா, கருணகலா, விஜயகலா**

## மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05 - 01 - 1948 | 28 - 11 - 2021 |

### சிதம்பரநாதன் நாகலிங்கம் (சிவம்)

*(முன்னாள் உரிமையாளர் - தாசன் ஸ்ருடியோ, தெல்லிப்பழை)*

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், கட்டுவன், கொழும்பு, கனடா Toronto ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரநாதன் நாகலிங்கம் அவர்கள் 28.11.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற இளையதம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரலீலா அவர்களின் அன்புக் கணவரும், சசி (சுவிஸ்), லஜி(கனடா), ராஜி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,இராஜேந்திரன், குவேந்தன், பகீரதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான ஞானேஸ்வரி, பத்மநாதன், நேசம்மா, தனேஸ்வரி, கதிர்காமநாதன் மற்றும் நிர்மலா(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,காலஞ்சென்றவர்களான ஞானா அமிர்தம், புஸ்பராணி, தேவராஜா, செகராஜா, யோகராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும்,யுவன், யுவேஸ், ஜோஷ்னா, ஜோஷன், ரெசீரா, ரெசான் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

பார்வைக்கு
Sunday, 05 Dec 2021 6:00 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை
Monday, 06 Dec 2021 7:30 AM - 9:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Monday, 06 Dec 2021 11:00 AM
Highland Hills Funeral Home & Cemetery 12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**சந்திரலீலா (மனைவி):** +14164311498
**லஜி (மகள்):** +16472918690
**குவேந்தன்( மருமகன்):** +14168396232
**சசி (மகள்) :** +41764407893
**ராஜி (மகள்):** +491738990515

தகவல்: **குடும்பத்தினர்.**












இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-ஜெமினி கணேசனும் சுருளி ராஜாவும்,இருட்டு திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை-அண்ணாத்த

**இரவு**

7.00 மணி : சமையல் சமையல்




7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

## ஓம் நிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : அன்னை மரியா (மறுஒளிபரப்பு சனி)
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஞானவழி மறு ஒளிபரப்பு ஞாயிறு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்